பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 வைகாசி 5 ஜ அவ் 23 இதழ் 96
யாழ்ப்பாணம் புதன்கிழமை 18-5-77

துரையப்பா கொலை வழக்கு:

# செல்வகுமார் விடுதலை;

## இன்பம் மீது வேறு குற்றச்சாட்டு

கொழும்பு, செவ். யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா கொலை வழக்குத் தொடர்பான சந்தேக நபர் செல்வரத்தினம் செல்வகுமார் (வயது 21) இன்று கொழும்பு மேலதிக நீதிபதி திரு. ஆர். ரணராஜாவினல் விடுதலை செய்யப்பட்டார்.

இவரைவிடுதலை செய்யுமாறு அரச சட்டத்தரணி திரு. மாரம்பனே நீதிபதியிடம் கோரியதைடுத்து இவர் விடுதலை செய்யப்பட்டார்.

### இன்பத்தின் மீது கொள்ளைக் குற்றச்சாட்டு

மற்ருெரு சந்தேக நபரான கனகரத்தினம் விஸ்வசோதிரத்தினம் அல்லது இன்பம் என்ற சந்தேக நபர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத நிலையிலும் அவர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டிருப்பது முறையாகாது என சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் சந்திரகாசன் விவேகானந்தன், சுமந்திரன், கந்தசாமி, உருத்திரமூர்த்தி ஆகியோரின் உதவியுடன் ஆஜரான சட்டத்தரணி திரு. மு. சிவசிதம்பரம் நீதிபதியிடம் தெரிவித்தார்.

இன்பம் என்ற பிரஸ்தாப சந்தேக நபருக்கு எதிராகக் கொள்ளைக்குற்றச்சாட்டு இருப்பதாக இக் கட்டத்தில் அரச சட்டத்தரணி நீதிபதியிடம் தெரிவித்தார்.

### பிணையில் விடலாமே?

கொள்ளைக் குற்றச்சாட்டு உண்டு என்று கூறப்பட்டாலும் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்படலாம் அல்லவா என்று திரு. சிவசிதம் அப்போது நீதிபதியிடம் தெரிவித்தார்.

இன்பம் என்பவர் மீது கொள்ளைக் குற்றச்சாட்டின் பேரில் எதிர்வரும் வியாழக்கிழமை தாம் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக அரச சட்டத்தரணி நீதிபதியிடம் சொன்னர்.

செல்வகுமார் மட்டுமே இன்று நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார்.

(2-ம் பக்கம் பார்க்க)

# யாழ். தொகுதியில் குமார் போட்டியிட முடிவு!

## தேர்தல் பிரசாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணத் தொகுதியில், தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் போட்டியிடவிருக்கிருர்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை யாழ்ப்பாணத் தொகுதித் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

வாலிப முன்னணிக்கிளைத் தலைவர் திரு. ஏ. மரியதாஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடவேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. யாழ்ப்பாணத்தில் கட்சிக்காரியாலயமொன்றைத் திறக்கவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேறியது.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் புதல்வியான திருமதி விஜயலட்சுமி சிவப்பிரகாசம்பிள்ளை நேற்றுப் பிற்பகல் தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களைச் சந்தித்துப்பேசினர்.

நேற்றுப் பிற்பகல் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களும் திருமதி விஜயலட்சுமி சிவப்பிரகாசம்பிள்ளையும் யாழ்ப்பாணத் தொகுதியில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தனர். (க-அ)

### முகமதலி வெற்றி

லண்டன், மே. 17

உலக அதிபர குத்துச் சண்டைவீரர் முகமதலி மெரிலாந்தில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் ஸ்பானிய வீரரான எலான்சிலாவை 15 புள்ளிகளால் தோற்கடித்தார். (உ)

### யாழ். நகரில்

● யாழ்ப்பாண நகரசபையின் சந்தையில் கடை வைத்திருப்பவர்களின் ஒப்பந்தகாலம் இம்மாதத்துடன் முடிவடைகிறது. இதற்குப் புதிய மாற்றுத் திட்டம் ஒன்று வருகிறது.

● யாழ். நகரில் மின் விநியோக அபிவிருத்தி

● யாழ். நகர வீதிகளின் நிலை.

● ...ஸ்டாண்டு நகரசபைக்குப் பொறுப்பாக இல்லையேல் தனியார் உடமையாகவே தொடர்ந்துமிருக்குமா?

இவைகளுக்கான விடைகளை நாளைய 'ஈழநாடு' இதழில் காணலாம்.

சங்கானை இளப் தாக்குதல் வழக்கு:

## 3 பொலிசார் உட்பட ஐவரும் குற்றவாளிகள் 31-வரை ரிமாண்ட்

யாழ்ப்பாணம், புதன்

சங்கானை இளப தாக்குதல் வழக்கில் 3 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட எதிரிகள் ஐவரையும் குற்றவாளிகளாகக் கண்ட மல்லாகம் நீதவான் திரு. எம். டி. ஜேசுரத்தினம் அவர்களை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு தண்டனை வழங்குவதலை இம்மாதம் 31-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் சங்கானைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தொகுதிகளில் வேட்பாளர்கள்

யாழ்ப்பாணம், புதன்

ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மஸ்கெலியா, கொழும்பிலும் 24 அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது.

தமிழர் சுயாட்சிக்கழகம், ஊர்காவற்றுறை: திருமலை, கோப்பாய், முல்லைத்தீவுத் தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது. மற்றும் சாவகச்சேரி; வட்டுக்கோட்டை, கிளிநொச்சி பருத்தித்துறை, காங்கேசன்துறை, நல்லூர். மட்டக்களப்பு தொகுதிகளுக்கும் சுயாட்சிக் கழகம் அபேட்சகர்களை நிறுத்தவிருக்கிறது.

திரு சி சுந்தரலிங்கம் தலை

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திராவுக்கு இத்தாலிய கம்பனி ரூ. 3 கோடி வழங்கியதா?

புதுடில்லி, மே 17

முன்னாள் இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி கடந்த லோகசபைத் தேர்தலில் தமது கட்சியின் தேர்தல் நிதியாக 3 கோடி ரூபாவை இத்தாலிய கம்பனி ஒன்றிடமிருந்து பெற்ருராம்,

இத்தகவலை இந்திராகாந்தியின் விவகாரங்கள் பற்றி ஆராயும் குழு வெளியிட்டுள்ளது.

டிராம்பே உரத்தொழிற்சாலையை விரிவுபடுத்தவென இத்தாலிய கம்பனி ஒன்றின் டைரக்டர் குவாட்ரோச்சியுடன் இந்திரா அரசு தொடர்புகொண்டது. இத்தாலிய கம்பனி 3 கோடி ரூபாவைத் தேர்தல் நிதியாக வழங்கினல் மட்டுமே இந்த டெண்டர் வழங்கப்படும் எனப் பேரம்பேசப்பட்டதாம்.

இதனை எதிர்த்த டாக்டர் அஜித் மஜீம் என்ற அதிகாரி அரசினல் பழிவாங்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [கி-இ]

# ஒற்றுமையைக்காக்கவே தொகுதி மாற்றம்!

## வீட்டை முற்றுகையிட்ட மக்களுக்கு அமிர் விளக்கம்.

பண்டத்தரிப்பு, செவ்.

''தமிழர் கூட்டணியின் ஒற்றுமையையும் கட்டுக் கோப்பையும் பாதுகாப்பதற்காகவே நான் வட்டுக் கோட்டைத் தொகுதியை விட்டு காங்கேசன்துறைத் தொகுதியில் வேட்பாளராக நிற்கச் சம்மதித்தேன்.

'எதிர்காலத்திலும் கூட்டணி கட்டுக்கோப்பாக இயங்குவதற்குஎமது சொந்த விருப்பு வெறுப்புகளைப் பாராது ஒன்றுபட்டு இயங்க வேண்டியது அவசியம். என் மீது நீங்கள் வைத்திருக்கும் அன்பை நான் நன்கு உணருகிறேன். நான் உங்கள் கோரிக்கையை இன்றைய சூழ்நிலையில் எப்படி ஏற்க முடியும் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்'.

இவ்வாறு நேற்றிரவு மூளாயிலுள்ள தமிழர் கூட்டணிச் செயல் அதிபர் திரு அ. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் திரண்டிருந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகுதி மக்கள் மத்தியில் உரையாற்றும்போது திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகலிலிருந்து வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சில்லாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், சங்கானை, காரைநகர், அராலி ஆகிய பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் திரு. அமிர்தலிங்கத்தின் இல்லத்திற்குச் சென்று அவரை வட்டுக் கோட்டைத் தொகுதியிலேயே போட்டியிடவேண்டும் என்றும் வேறு தொகுதிக்குப் போக வேண்டாம் என்றும் வற்புறுத்தினர்கள். திரு. அமிர்தலிங்கமும், திருமதி மங்கையர்க்கரசியும் தங்கள் நிலைமை அவர்களுக்கு விபரமாக எடுத்துக்கூறி கூட்டணியின் நலனை முன்னிட்டு இந்தமுடிவைச் சகலரும் ஏற்கவேண்டும் என்று தெரிவித்தனர்.

## 'எனது நேர்மையை எல்லாரும் மதிக்கின்றனர்''

### வட்டு. எம். பி.

பண்டத்தரிப்பு, செவ்வாய்

''வட்டுக்கோட்டைத் தொகுதியில் எனது வெற்றிக்காக உழைப்பதற்கும், ஆதரவு திரட்டுவதற்கும் மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய பிரதேசங்களிலுள்ள பலர் முன்வந்திருக்கின்றனர். கைலஞ்சம், ஊழல் என்பன எதுவுமின்றி நேர்மையுடன் சேவையாற்றிவரும் எனக்கு தொகுதி மக்கள் பலத்த ஆதரவு தருவார்கள் என்பதில் ஐயமில்லை'' என்று பண்டத்தரிப்பு நவின சந்தையைத் திறந்துவைத்துப் பேசுகையில், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா குறிப்பிட்டார். பண்டத்தரிப்பு

(2-ம் பக்கம் பார்க்க)



## புலேந்திரா மறைவு

மரணத்தின் முன் எல்லோரும் சமமானவர்களே. ஒருவரின் குலம், புகழ், பிறப்பு, பதவி, செல்வாக்கு ஆகியவை காரணமாக ஒருவர் மரணத்தில் வேறுபாடுஏற்படுவதில்லை. ஆயின், மனித சமுதாயத்துக்குப் பயன்படும் வாழ்க்கையை நடாத்திவந்த ஒருவனின் மரணம் துயர் மிகத்தரும் பெருமரணம் ஆகின்றது. அப்படிப்பட்ட துயர்தரும் பெருமரணம் ஒன்று அண்மையில் நிகழ்ந்தது.

கரவெட்டியில் வதிரி என்னும் ஊரிலே 'இராசா' என எல்லோராலும் அழைக்கப்பட்டுவந்த திரு. எஸ். ஆர். புலேந்திரா, தமது 5?வது வயதில் திடுமெனக் காலமானர். ஒருகாலததில் இலங்கைச் சட்ட சபையிலே தமிழர் பிரதிநிதியாக விளங்கித் தமிழ் மக்களுக்கு அரியதொண்டுகள் ஆற்றிவந்த முல்லைத்தீவு தம்பையா முதலியார் சபாரத்தினத்தின் அருமைப் புதல்வர் இவர். புகழ்பூத்த மரபிலே தோன்றி, ஒழுக்கசீலராகவும், பண்பாளராகவும், உள்ளூர்ப் பழுத்த பயன்தரும் மரம் போல் வாழ்ந்து, மறந்தும் அரசியற் சூழல்களிலே புகுந்துகொள்ளாமல் மக்களுக்கு அரிய பணிகள் பல புரிந்துவந்த அவர் பிரிவு ஈடுசெய்யமுடியாதது.

1939ம்ஆண்டில் கல்லூரியை விட்டுவிலகி ஐக்கிய இராச்சியத்தில் அமைந்துள்ள குவீன் மேரிக் கல்லூரியிலே பொறியியற் கல்வி பெறுவதற்காகச் சென்று, மின்னியற் பொறியியலாளர் பட்டம்பெற்று இலங்கைக்குத் திரும்பினர். திரும்பியதும், லங்கா பவர்லைன்ஸ் தாபனத்தில் ஒரு பொறியியலாளராகப் பணியாற்றத் தொடங்கினர். ஆறு ஆண்டுகள் அங்கிருந்து பணியாற்றியபின் 1958ம் ஆண்டிலே கல்லோயா அபிவிருத்திச் சபையிலே சேர்ந்தார். மூன்று ஆண்டுகள் அங்கிருந்து பணியாற்றிக்கொண்டிருந்த போது, 1961ம் ஆண்டிலே இலங்கைக் கனிமமணற் கூட்டுத்தாபனம் அவருடைய சேவையினை நாடியது. புல்மோட்டையில் இல்மனைற் தாபனத்திலே சக்திப் பொறித்தொகுதிப் பொறியியலாளராகப் பணியேற்ற அவர், கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் யாவற்றிலும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்து, தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கமளிக்கும் வகையில் பணிபுரிந்து, இல்மனைற் முதலான உற்பத்திப் பொருள்களுக்கு உறுதியான அந்நிய செலாவணி மதிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியளித்து வந்தார்.

1976ம் ஆண்டின் நடுப்பகுதியில் சேவையிலிருந்து இளைப்பாறிக்கொண்டபின், தமது முன்னேர் இல்லத்தில் வதிரியிலே தங்கியிருந்து சமூகப்பணி ஆற்றிக்கொண்டிருந்தார். வதிரி மடத்துப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாக்கள் சபையிலும், வற்றுப்பளைக் கண்ணகை அம்மன்கோயில் தர்மகர்த்தாக்கள் சபையிலும் உறுப்பினராக இருந்து பெரும் பணிகள் ஆற்றினர். அவர்கள் ஆற்றிவந்த பெரும் பணிகளால் அத்திருக்கோயில்கள் புதுமைகாட்டி இயங்கிவருகின்றன.

-அன்பன்

## "கால்நடை வளர்ப்பு மூலம் பசளை தட்டுப்பாடு நீங்கும்"

உடுப்பிட்டி, செவ்.

"பசளைத் தட்டுப்பாட்டைப் போக்க விவசாயிகள் கால் நடைகளை வளர்க்க வேண்டும். முற்காலத்தில்மாடுகளே பசளைத் தொழிற்சாலையாக விளங்கின. மாட்டுப் பசளைகமக்காரர்களுக்கு விமோசனம் அளிக்கும்"

விவசாயக் காணி அமைச்சின் கிராமியத் தாபனங்களும், உற்பத்திச் சட்டப் பிரிவும் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் திரு. ஜே. செந்தில்நாதன் கமக்காரர்களுக்கு மேற்கண்ட யோசனையை விடுத்துள்ளார்.

புலோலி கமத்தொழிற் சேவை நிலையத்தில் நடைபெற்ற 1977/78ம் ஆண்டிற்கான விவசாயச் செயற்படு திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மாட்டுப் பசளை உற்பத்தி பற்றிய தனது ஆலோசனையைச் சமர்ப்பித்தா[illegible]

புலோலி க[illegible]தொழில் விளைவுப்பெருக்கக்கு[illegible] பதில் தலைவர் திரு. அ. கருணாநிதி தலைமையில் நிகழ்ந்த இக்கூட்டத்தில் வடமராட்சி தெற்கு மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும்மயிலும், மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சிவா. முத்துலிங்கம், விவசாயப் போதனாசிரியர் திரு. ஆர். தில்லையம்பலம், பெரும்பாக அலுவலர் திரு. கே. இரத்தினசாமி. கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழு இயக்குநர்கள், பயிர்ச் செய்கைக் குழுக்களின் உறுப்பினர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உதவிப் பணிப்பாளர் திரு. செந்தில்நாதன் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"விவசாயிகளின் துயர் களையவென நாம் வரவழைத்த 'சுமிசிடின்' கிருமிநாசினியையும் மோசடி செய்கின்றனர். இதனால் மிளகாயில் புழுத் துடிக்கின்றது. கமக்காரனும் புழுவாய்த் துடிக்கின்ரன். கிருமிநாசினி விநியோகத்தில் கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழுக்கள் நேர்மையாக இயங்கி விவசாயிகளுக்கு உதவ வேண்டும். கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழுக்கள் மக்கள் ஸ்தாபனமாக இயங்கவேண்டுமென்பதே அரசின் இலட்சியமாகும்.

### கட்டாக்காலிகள் பிரச்னை தீர...

கட்டாக்காலி ஆடுகளும், மாடுகளும் விவசாயிகளை எதிர்நோக்கும் மற்றுமோர் பெரிய பிரச்னையாகும். விவசாயிகள் தமதுதோட்டங்களையும், வயல்களையும் வேலிஅடைத்துப் பாதுகாக்கவேண்டும். அதே போல் ஆடு, மாடு வளர்ப்போர் தமது கால் நடைகளைக்கட்டி விவசாயிகளுக்கு இடர்ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

பிரதேச ரீதியாகக் கால் நடைகளை மேய்ப்பதற்கு ஆட்களை நியமித்தல் மூலம் கட்டாக்காலிகளின் பிரச்னையைத்தீர்க்கலாம். இதனால் ஆடு, மாடு பிடிக்கும் ஆட்களை நியமிக்கவேண்டிய அவசியம் நேரிடாது, கால்நடை மேய்ச்சல் தரைகள் அபிவிருத்திசெய்யப்படவேண்டியதும் அவசியம் மாடுகளைநல்லமுறையில் பேணுவதின் மூலம் உரப்பசளைத்தட்டுப்பாட்டை முற்ருக ஒழித்துக்கட்டமுடியும்"

## துரையப்பா...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

### உண்மையான உவகை எப்போது?

அவர் விடுதலை செய்யப்பட்டதும் அவரை அணுகிய நமது நிருபரிடம் அவர், "இவ் விடுதலை என் உடலுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. உள்ளத்துக்கல்ல. என் சக நண்பர்களும் விடுதலையாகும்போது தான் என் உள்ளம் உவகையடையும்" என்ருர்.

அமரர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், எம். திருச்செல்வம், திரு. மு. சிவசிதம்பரம் முதலாஞேருக்கு தாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருப்பதாக கூறிய அவர் ஜி. ஜி., எஸ். ஜே. வி., திருச்செல்வம் ஆகியோரது இல்லங்களுக்கும் இன்று சென்ருர்.

இம்மாதம் 20-ந் திகதி புத்தளம் சென்று அங்கு சமீபத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பான தமது அனுதாபத்தைாம் அஞ்சலியையும் செலுத்திவிட்டு அவர் 21-ம். திகதி யாழ்ப்பாணம் புறப்படுகிருர்.

துரையப்பா கொலை வழக்கில் ஐவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது தெரிந்ததே. (ம-உ)

## எனது—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டணசபை விசேஷ ஆணையாளர் திரு. சோ. அருணசலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசும்போது, "மறைந்த தலைவர் திரு. செல்வநாயகத்திற்கு முதலில் எனது அஞ்சலியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். எங்கள் பகுதியின் பொருளாதார வளத்தை அதிகரிக்கச் செய்வதுதான் அவருக்கு நாங்கள் செலுத்தக்கூடிய பெரிய அஞ்சலி என்று கருதுகிறேன் எனக் கூறினர்.

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு. இ. இராசசுந்தரம், பிராம்பற்று கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. வ. செல்வத்துரை, கிராமசேவையாளர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி; சுகாதார பரிசோதகர் திரு. எஸ். செல்வரத்தினம், மகளிர் மகாவித்தியாலய மாணவி செல்வி வி. சித்திரா, பட்டணசபை செயலாளர் திரு. ஆ. ஞானசேகரம் ஆகியோரும் பேசினர். (அ)

## சங்கானை—

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

கான்ஸ்டபிளான செனிவரத்தின, ரணவக்க, ஜெயவர்த்தோன் செல்லத்துரை, நாகேஷ் ஆகியோர் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், சங்கானை சன்றைஸ் ஸ்போட்ஸ் கிளப்பைத்தாக்கியதாகவும் கிளப் உரிமையாளர் நாகலிங்கம் ரவீந்திரகுலத்தைத் தாக்கியதர்கவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினமும் 3-ம்எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், 4-ம், 5-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். நடராசாவும் ஆஜராஞர்கள்.

சட்டத்தரணி ஏ. அன்ரனி இன்ஸ்பெக்டர் என். பத்மநாதனின்உதவியுடன் வழக்கை நடத்தினர்.

நீதவான் எதிரிகளின் கைவிரல் அடையாளம் எடுக்க உத்தரவிட்டு தண்டனை வழங்குவதை இம்மாதம் 31-ந் திகதி ஒத்திவைத்தார்.

எதிரிகள் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## உதாசீனம் செய்வதேன்?

சாய்ந்தமருது, செவ்.

கரைவாகு தெற்கு (சாய்ந்தமருது) கிராம சபைஎல்லைக்குட்பட்ட பிரதானவீதிகளுக்கு வீதிகளின் பெயர்களைக் குறிக்கும் பெயர்ப்பலகைகளைத் தொங்க விடுமாறு சாய்ந்தமருது வை. எம். எம். ஏ.மேற்படி கிராமசபைத் தலைவர் ஜனுப் ஏ. எல். எம், யூசுப்புக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்து சுமார் இரண்டு வருடகாலம் சென்றும் அதற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை இதனல் இவ்வியக்கம் கிராமசபைத் தலைவர் மீது அதிருப்தி தெரிவித்துள்ளது.

THE JAFFNA ACADEMY

376, Main Street, Chundikuli. Phone 617. Week-end classes (Saturdays & Sundays) for the C. E. I. Parts I and II May 1978 Examinations commence on Saturday 4th June.

Apply on forms obtainable from Academy office. Application close on 31st May.

Director.

9-5-77.

6139

ஏலவிற்பனை

மின்குமிழ் கட்டைகள், வெற்றுத் தார்பீப்பாக்கள், பழைய வாளிகள், மண்வெட்டிகள், போத்தல்கள் உட்பட வேறு பல பொருட்களும் 20-05-77-ந் திகதி காலை 9-00 மணிக்கு மாநகரசபை பொதுக் களஞ்சியத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சித்திபெற்ற கேள்விக்காரர்கள் பொருட்களின் கேள்வித்தொகையை உடன் செலுத்திப் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

க. சிவஞானம்,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

பொதுக்களஞ்சியம்,
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1977-05-13. 6209

வரி விளம்பரம்

விற்பனைக்கு

யாழ். மாநகர எல்லைக் கருகாமையில் கொக்குவில் பழைய தபால் கந்தோருக்கு முன்பாக நான்கு பரப்புக் காணி வீடு கட்ட உகந்தது. மா, தென்னை, கக்கூசுடன் உள்ளது. ஆ. சொர்ணலிங்கம், "சொர்ணகிரி" கொக்குவில். 6213

தேவை

எலுமிச்சம்பழக் கோதுகள் நன்கு காய்ந்தது தேவை. சேகரித்துக்கொண்டுவரவும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6202

வகுப்புகள்

வெல்டிங் (Electric & Gas மூன்று மாதம், இலெக்றிக் வயறிங் மூன்று மாதம், ரேடியோ ஆறு மாதம் காலை, பிற்பகல், மாலைநேர வகுப்புகள் எமதுN.I.E.T.டிப்ளோமா பெற்று வெளிநாடுகளில் ஏராளமாஞேர் வேலை பார்க்கிருர்கள். National Institute of Engineering Technology மைற்மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6210

கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம், பொது அறிவு, ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6212, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம், 6212

வெற்றுச் சாக்கு ஏல விற்பனை

இடம்: புலோலி ப. நோ. கூ. சங்கம்.

காலம்: 21-05-77 காலை 10-00 மணி.

தொகை: 4000 சாக்குகள் வரை ஏலத்தில் விடப்படும்.

பொது முகாமையாளர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை,
13-05-77. 6191

கொப்பரு தேவை

ஒரு கிழமைக்கு இரண்டு லொறி லோட் கொப்பரு தேவைப்படுகின்றது. இப்பொழுது நம்பர் I (ஏற்றுமதித்தராதரம்) 1 பாரம் ரூபா 1100/-, நம்பர் II முதலாம் இரகத்திலிருந்து ரூபா 50/- கழித்தும், நம்பர் III இரண்டாம் இரகத்திலிருந்து ரூபா 75/- கழித்தும், எடுக்கின்ருேம். நம்பர் IV இரகம் ரூபா 600/- ஆக கொள்வனவு செய்கின்ருேம்.

விபரங்களுக்கு:

கொள்வனவு முகாமையாளர்.
சி. எஸ். கே. ஒயில் மில்ஸ்
யாழ்ப்பாணம். 6157

நியூ பிறில்லியன் கல்வி நிலையம்

(பதிவு இல. 10069)

∘ தமிழ் ∘ ஆங்கிலம் ∘ சிங்களம்
(தட்டெழுத்து-சுருக்கெழுத்து)
∘ வெல்டிங் டிப்புளோமா

விபரங்களுக்கு:

காலை 9—10 மணி வரை
மாலை 4—இரவு 8-30 மணி வரை

திருத்தணிகை,

284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

# எம். ஜி. ஆர் கட்சி - மார்க்ஸிய கம்யூனிஸ்ட்

# தேர்தல் உடன்பாடு

## அ.இ.அ.தி.மு.க. வுக்கு 195 தொகுதிகள்; கம்யூனிஸ்டுக்கு ,20 .தொகுதிகள்

சென்னை, மே 17

தமிழ் நாட்டில் எம். ஜி. ஆரின் அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே தேர்தல்உடன்பாடொன்று ஏற்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டுக்கமைய அ. இ. அ. தி. மு. க. 195 தொகுதிகளிலும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி 20தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. அ. இ. அ. தி. மு. க. பிரசாரச் செயலாளர் திரு. எஸ். பி. சோமசுந்தரம், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் இத்தகவலை வெளியிட்டனர்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி முதலில் 30 தொகுதிகளில் போட்டியிடமுன்வந்ததாகவும் பின்னர் இந்த உடன்பாட்டுக்கமைய 10 தொகுதிகளை வாபஸ்பெற்று 20 தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் திரு. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜனதா கட்சிக்குமிடையே நேற்று தேர்தல்உடன்பாடு குறித்து நடைபெற்ற பேச்சுக்கள் தொகுதி ஒதுக்கீடு தொடர்பாக எழுந்த கருத்துவேறுபாடு காரணமாக முறிவடைந்தது தெரிந்ததே. (இ)

## மணிப்பூரிலும் ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, மே 17

மணிப்பூர் மாநிலத்தில் ராஷ்டிரபதி ஆட்சி அமுல் செய்யப்பட்டுள்ளது.

சட்டசபைக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடியை அடுத்து கவர்னர் திரு. எல். பி. சிங்கின் ஆலோசனையின்பேரில் அங்கு ராஷ்டிரபதி ஆட்சி அமுல்செய்யப்பட்டது.

74-ம் ஆண்டு தேர்தலின் பின் கட்சி மாறல் காரணமாக 5 மந்திரிசபைகள் பதவி ஏற்றபோதிலும் அங்கு அரசியல் நெருக்கடி தீரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ[

கொழும்பு மேற்கு தொகுதி

## ஈழவேந்தனை நியமிக்க கோரிக்கை

கொழும்பு, செவ்.

கொழும்பு மேற்குத் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திரு. ஈழவேந்தனை நியமிக்குமாறு கொழும்பு த. வி. கூ. கிளை வேட்பாளர் நியமனக் குழுவைக் கோரியுள்ளது.

இத்தேர்தல் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதப்படுவதால் கொழும்பு வாழ் தமிழ் மக்களின கருத்தையறிய இது வாய்ப்பளிக்கும் என்று இக்கிளை தெரிவித்துள்ளது.

இத்தொகுதியில் போட்டியிடும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பல சந்தர்ப்பங்களில் தமிழினத்திற்கு எதிராகச் செயல்பட்டார் என்பதையும் இத்தொகுதியில் குறிப்பிடத்தக்க அளவு தமிழ் வாக்காளர் உள்ளனர் என்பதையும் கிளை சுட்டிக்காட்டியுள்ளது. (ம-உ)

## "கல்வித்திட்டத்தின் மூலம் புதிய சகாப்தம் உருவாகியுள்ளது"

யாழ்ப்பாணம், புதன்

'புதிய கல்வித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மாணவர்கள் பல நுட்பமான துறைகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ஏட்டுப் படிப்புடன் இருந்த கல்வி வாழ்க்கையில் சமுதாயத்தோடு இணைந்ததாக மாற்றப்பட்டதன்மூலம், புதிய சகாப்தம் ஒன்றினை உருவாக்க முடிந்துள்ளது. தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி தேசிய உயர் கல்விச் சான்றிதழ் வகுப்புக் கல்வித்துறைச் செய்திட்ட மாணவர்களின் முன்மாதிரி, இலங்கையிலுள்ள ஏனைய கல்லூரிகளில் பின்பற்றவேண்டியதாகும்'.

இவ்வாறு கல்விப்பணிப்பாளர் பிரமஸ்ரீ கி லக்ஷ்மண ஐயர், தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் நடைபெற்ற தமிழ்பேணுந் திருநாளில், வித்துவ சிரோன்மணி சி. கணேசையர் உருவப்படத்தை திரை நீக்கம் செய்தும், நூற்காட்சியை மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தும் பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாஜன - தமிழ்மன்றத்தலைவர் செல்வன் க. தங்கவேல் தலைமையில் நடைபெற்றவிழாவில்வித்துவசிரோமணி மறைந்த திரு சி. கணேசையர் என்னும் பெயரில், அவரது வாழ்க்கை வரலாற்று நூலும் வெளியிடப்பட்டது. மகாஜன - கல்வித்துறைச் செய்திட்ட மாணவர்களால் வெளியிடப்பட்ட இந்த நூலின் முதற்பிரதியை கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதியிடமிருந்து திரு. கி. லக்ஷ்மணஐயர் பெற்றுக்கொண்டு தொடர்ந்துபேசுகையில் 'கணேசையர் தமிழ்கூறும் நல்லுலகில் நமக்குப் பெருமை தேடித்தந்தவர். அவரின் புலமை தமிழ்வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது. அவர் எழுதிய தொல்காப்பிய உரை தமிழ்நாட்டு அறிஞர்களால் பெரிதும் விரும்பப்பட்டதாகும்' என்றார்.

பிரமஸ்ரீ சி. கணேசையரின் பிரியமுள்ள முதல் மாணவனாகிய பண்டிதர் இ. நமசிவாயம் தமது சிறப்புரையில் "இலங்கையில் கிடைக்கக்கூடிய பொருளுக்கு மதிப்பு இல்லை என்றும், யாழ்ப்பாணத்துப் பெரியார்களின் பெருமைகளை தமிழ்நாட்டினர் பாராட்டும்போதுதான் நமக்கு அதன்சிறப்பு விளங்கும் என்றும், இத்தகைய பெருமைகளை நமக்குத் தேடித்தந்தவர் வித்துவசிரோமணி கணேசையர் ஆவர் என்றும் குறிப்பிட்டார். விழாவிற்கு கல்வித்துறைச் செய்திட்டக்குழுத்தலைவர் செல்வன் அ. சோதிருபன் வரவேற்புரைகூற, வித்துவான் நா. சிவபாதசுந்தரம் நன்றியுரை நிகழ்த்தினர்.

# நெடுஞ்செழியன் கட்சி தேர்தலில் போட்டியிடாது

சென்னை, மே 17

அடுத்தமாதம் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் மக்கள் திராவிட முன்னேற்றக்கழகம் போட்டியிடமாட்டாது.

இத் தகவலை மக்கள் தி. மு. கழகத்தின் தலைவர் டாக்டர் இரா நெடுஞ்செழியன் நேற்று சென்னையில் தெரிவித்தார். எந்த ஒரு கட்சியுடனும் ம. தி. மு. க இணைந்து தேர்தல் பணிகளில் ஈடுபடமாட்டாது என்றும் தெரிவித்த டாக்டர் நெடுஞ்செழியன் ம. தி. மு. க. ஆதரவாளர், எந்தக்கட்சிக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்பது பற்றி விரைவில் பொதுக்குழு கூடித் தீர்மானிக்கும் என்று தெரிவித்தார்.

ம. தி. மு. க. விக்கு தற்போது தேர்தலில் போட்டியிடக்கூடிய சூழ்நிலையும் வாய்ப்பும் இல்லை. ஆகவே தான் தேர்தலில் இருந்து ஒதுங்கிவிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார் (இ)

# பதவி விலக பூட்டோ இணக்கம்

இஸ்லாமாபாத், மே 17

அவசியம் ஏற்பட்டால் தாம் பதவி விலகத் தயாராய் உள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ தெரிவித்துள்ளார்,

பாக். அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்காக தேசியப்பேரவையைக் கலைப்பதைவிட தாம் பதவி விலகுவது பயன்தருமானால் தாம் ராஜினாமாச் செய்யத் தயாராய் உள்ளதாகத் தெரிவித்தார்.

மீண்டும் தேர்தல் நடத்துவதில் அர்த்தமில்லை என்றும் தெரிவித்த ஜனாப் பூட்டோ அவசியம் ஏற்படும் பட்சத்தில் மக்கள் விரும்பினால் மீண்டும் தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார். (இ)

## காங்கேசனில் செல்வா சிலை

மாவிட்டபுரம், செவ்.

அமரர் செல்வாவுக்கு காங்கேசன்துறையில் சிலை அமைப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடத்துடன் பேச்சுவார்த்தைநடத்தி முடிவெடுப்பதற்காக குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மறைந்த தமிழ்த் தலைவர் செல்வா ஞாபகார்த்தமாக காங்கேசன்துறைப்பட்டின மக்கள் சார்பில் பட்டின முன்றலில் சிலை ஒன்றை அமைப்பது சம்பந்தமாக காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டமொன்றிலேயே மேற்படி குழு தெரிவு செய்யப்பட்டது. காங்கேசன்துறைப் பட்டின பொது மக்கள் வர்த்தகர்கள், பிரமுகர்கள்துறைமுகத்தொழிலாளர்கள் ஆகியோர் பங்குபற்றிய இக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு ஆலோசனைகளும் தெரிவிக்கப்பட்டன. இறுதியில் காங்கேசன்துறைப் பட்டின முன்றலில் பிரமாண்டமான தோர் அமரர் செல்வநாயகத்தின் சிலையை அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

இதற்கான ஒழுங்குகளைக் கவனிக்க காங்கேசன்துறைப் பட்டின சபை முன்னாள் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் தலைமையில் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இக்குழு ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்து முடித்ததும் சிலை அமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் என்றுதெரிவிக்கப்பட்டது.

## 224தொகுதிகளில் ஜனதா போட்டி

சென்னை, மே 17

தமிழ்நாட்டில் இதுவரை 224 வேட்பாளர்களின் பெயர்களை ஜனதா கட்சி அறிவித்துள்ளது.

இதன் தோழமைக் கட்சிகளான தமிழ்நாடு முஸ்லிம் லீக் 3 தொகுதிகளிலும் குடியரசுக்கழகம் 1 தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

மிகுதி 6 தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் விபரம் இன்று அறிவிக்கப்படும் என்று ஜனதா கட்சி அறிவித்துள்ளது. (இ)

•••

## காங்கிரஸிலிருந்து ராஜினமா

சென்னை, மே. 17

காங்கிரஸ் ராஜ்யசபை உறுப்பினரான திரு. ஆர். கே. பார்த்தசாரதி காங்கிரஸிலிருந்து ராஜினமாச்செய்துள்ளார்.

சேலத்தைச் சேர்ந்த இவர், வெளியிட்டுள்ள அறிக்கையில் காரணம் கூறமுடியாத பல தவறுகளைக் காங்கிரஸ்காரர்கள் சிலர் செய்துள்ளபோதிலும் காங்கிரஸ்கமிட்டி அவர்கள் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறியுள்ளார். (இ)

# வேட்பு மனு தாக்கல் செய்யும் இறுதிதினம்இன்று

## 10 மாநிலங்களிலும் 3 யூனியன்களிலும் அடுத்த மாதம் தேர்தல்

(புதுடில்லி)

தமிழ்நாடு பாண்டிச்சேரி உட்பட பத்து மாநிலங்களினதும் மூன்று யூனியன் பிரதேசங்களினதும் சட்டசபைகளுக்கான தேர்தல் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதித் தினம் இன்றாகும்.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதில் சகல அரசியல்கட்சிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இம்முறை பெரும்பாலான சுயேட்சை அபேட்சகர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்திரா ஆட்சியில் கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி அமுல் செய்யப்பட்டிருந்த தமிழ்நாடு, கடந்த லோகசபைத் தேர்தலில் காங்கிரஸ்கட்சி படுதோல்வி அடைந்த மாநிலங்களான ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஹரியானா, ஹிமாலயபிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், பீகார் ஆகிய 10 மாநிலங்களிலும் பாண்டிச்சேரி, கோவா, டில்லி ஆகிய மூன்று யூனியன் பிரதேசங்களிலுமே அடுத்தமாதம்தேர்தல் நடைபெறஉள்ளது.

காங்கிரஸ்கட்சி படுதோல்வியடைந்த 9 மாநிலங்களையும் மத்தியஅரசு கலைக்கமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அவ்விவகாரம் சுப்ரீம்கோர்ட் வரை சென்றுவந்தது தெரிந்ததே.

தமிழ்நாட்டில்அடுத்தமாதம் 12-ம் திகதியும் 14-ம திகதியும் தேர்தல் நடைபெறுகிறது. (இ)

## சஞ்சய்காந்தியின் மாருதி கம்பனிக்கு 1.5 கோடிகடன்

புதுடில்லி, மே 17

திருமதி இந்திராகாந்தியின் மகன் திரு. சஞ்சய்காந்திக்குச் சொந்தமான மாருதிகார் கம்பனிக்கு 25 ஆயிரம் ரூபாவங்கி இருப்பு மட்டுமே இருந்தவேளையில் 1.5 கோடி ரூபாவை அரச கடனாக வழங்கியிருந்தது.

இத்தகவலை மாருதிவிவகாரம் குறித்து ஆராய ஜனதா அரசு அமைத்த புலனாய்வுக் குழு வெளியிட்டுள்ளது. (இ)

**மணிவாக்கு**

எவனொருவன் கடவுளுண்டென்பதில் ஐயுறுகிறானோ அவன் அழிகிறான்.

— காந்திமகான்

ஈழநாடு

THE EELANAADU

## வீதி விபத்துக்கள்

வருடத்தில் நான்காயிரம் பேர் விபத்துக்களில் மாண்டு போகின்றனர். இதில் மூன்றிலொரு பங்கினர் வீதி விபத்துக்களில் பலியாகிறார்கள்.

இத்தகவலை சுகாதார அமைச்சர் திருமதி சிவகாமி ஒபயசேகரா ஒருகருத்தரங்கில் தெரிவித்திருக்கிறார்.

வீதிவிபத்துக்களைத் தடுக்க வேண்டுமென்றும் இலங்கையைப்போன்ற ஒரு சிறிய நாட்டில் இவ்வளவு அதிகமான விபத்துக்கள் நடைபெறக்கூடாதென்றும் அமைச்சர் கவலையோடு தெரிவித்திருக்கிறார்.

நமது நாட்டில் வாகனங்களின்தொகை அதிகரித்து வருகின்ற அளவுக்கு வீதிகள் கூடவில்லை. ஒருசில வீதிகள் அகலமாக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான வீதிகள் இன்னமும் பழைய நிலையிலேயே இருக்கின்றன.

வீதிகளுக்கு அதிகமாக வாகனங்களின்தொகை அதிகரித்திருப்பதும் வாகனங்களின் அளவுக்கு வீதிகள் அகலமில்லாதிருப்பதும் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு ஒருகாரணம்.

வாகனங்களைச் செலுத்துவதற்கு லைசென்ஸ் பெற்றவர்கள் எல்லோருமே அவற்றைச் செலுத்துவதற்கு முழுத்திறமையும் தகுதியுமுள்ளவர்கள் என்பது சந்தேகம்.

சாரதிகள் இடையிடையே தகுதி வாய்ந்தவர்களால் பரிசோதிக்கப்படுவது நல்லது.

வீதிவிபத்துக்களைத் தடுப்பதில் வீதிவிபத்துத் தடுப்புச்சங்கமும் மற்றும் பொதுநலனில் அக்கறையுள்ள இயக்கங்களும் முயற்சி செய்துவருகின்றபோதிலும் இதில் அதிக முன்னேற்றம் காணப்படவில்லை.

இதேகருத்தரங்கில் பேசிய திரு. ஜே. பி. ஒபயசேகரா இன்றையநிலைக்குப்பொருத்தமாக மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தைப்புதுப்பிக்கவேண்டுமென்று யோசனை தெரிவித்திருக்கிறார். இதற்குமுன்னர் ஒரு குழு நியமிக்கப்பட்டதென்றும் அதுதெரிவித்த சிபாரிசுகள் அப்படியே அடங்கிவிட்டன என்றும் அவர் கூறியிருக்கிறார்.

காலத்துக்கேற்ற முறையில் சட்டவிதிகள் மாற்றப்படவேண்டும். வீதிவிபத்துக்களைத் தடுப்பதற்கு இதுவும் அவசியமாகும்.

வீதிவிபத்துக்கள் அதிகரிப்பதற்கு சாரதிகள் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவதும் ஒருகாரணமாகும்.

வீதிவிபத்துக்களால் உயிர்ப்பலி ஏற்படுவதுமட்டுமல்லாமல் பலர் அசக்தர்களாகிவிடுகிறார்கள்.

ராகமையிலுள்ள காசநோய்ஆஸ்பத்திரியை, விபத்துக்களில் சிக்கிப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் ஆஸ்பத்திரியாக மாற்றப்பட்டிருப்பதாகவும் அங்கு ஐநூறு படுக்கைகளுக்கு வசதி செய்தும் விபத்துக்கள் அதிகரித்துள்ளதால் அதுவும் போதாமலுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

வீதிவிபத்துக்களைத் தடுப்பதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்கப்படாவிடில் உல்லாசப்பயணிகள் கூட இங்கு வரத் தயங்குவர். சாதாரண மக்களும் வீதிகளில் நடமாட அஞ்சுவர்.

காலையில் வீட்டிலிருந்து புறப்படும்கணவனும் பிள்ளைகளும் மாலையில் சுகமே திரும்பிவந்து சேரவேண்டுமே என்று குடும்பத்தலைவிமார் ஏங்கிக்கொண்டிருக்கும நிலை இல்லாதொழியவேண்டும்.

'அமரரின் இலட்சியத்தை அடைய

# 'தோளோடு தோள்நின்று உழைப்போம்' — வி. பி.

மாவிட்டபுரம், செவ்வாய்

"அமரர் செல்வநாயகத்தில் எனக்கு நெடுங்காலமாக மதிப்பு உண்டு. நான் ஒரு முறை உடுவிலில் தேர்தலில் நிற்க நேர்ந்தபோது எனது வாக்கை காங்கேசன்துறையில் அப்போது போட்டியிட்ட தந்தை செல்வநாயகத்திற்கே அளித்தேன். ஆனால் 1975ல் நடந்த காங்கேசன்துறை உபதேர்தலில் எனது விருப்பத்திற்கு மாறாக தீக்குளிப்பது போன்று அவரை எதிர்த்துப் போட்டியிட நேர்ந்தது. என்றாலும் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளின் காரணமாக அவரது இலட்சியத்தை அடைவதற்கான பாதையில் நானும் எனது பங்கை ஆற்றக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. வாயளவில் மட்டுமல்லாது செயலளவில் அமரரின் இலட்சியத்தை விரைவில் அடைய நாம் தோளோடுதோள் உழைக்கத் தயாராயுள்ளோம்.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் கருகம்பானையில் இடம்பெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

திரு வ. கந்தையா தலைமையில் அமரர் அமரர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடாத்தப்பட்ட இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியாவது:

"ஈழத்தமிழினம் என்றும் அந்த இனத்தின் தாயகமான வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் ஆட்சியுரிமை அந்த இனத்திற்கு வேண்டுமென்றும் எமது கட்சி 54-ம் ஆண்டு முதல் வற்புறுத்தி வந்துள்ளது. 54-ம் ஆண்டில் முன் வைக்கப்பட்ட 5 அம்சத்திட்ட அடிப்படையில் தமிழர் பிரச்னைகளுக்கு தீர்வுகாண முயற்சிகளை எடுத்து வந்தது. புதிய குடியரசு ஏகாதிபத்தியத்தை ஒழித்தமைக்காக வரவேற்றோமே தவிர தமிழ் மக்களது உரிமைகளைப் பொறுத்தவரை எதிர்ப்புத் தெரிவித்தோம். நாட்டின் நலனுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து இயங்க முடியுமானால் தமிழ் மக்களின் நலனுக்காக அவர்களுக்கென பிரதேசசுயாட்சி அமைப்பை ஏற்படுத்துவதற்கு தமிழ்மக்களுக்குத் தலைமை தாங்கும் தமிழரசுக்கட்சியுடன் ஏன் சேர்ந்து போராடக்கூடாது என பலகாலமாக எனது கட்சிக்குள் நடத்தி வந்த போராட்டத்திற்கு இன்றுதான் பயன் ஏற்பட்டுள்ளது.

"நாம் கூட்டணியுடன் இணைந்து செயல்பட முன்வந்துள்ளது. கூட்டணியை பலவீனப்படுத்தவோ திசைதிருப்பவோ அல்ல. அமரர் செல்வநாயகத்தின் இலட்சியத்தின் அடிப்படையில் தோளோடு தோள் நின்று உழைப்பதற்காகவே" என்றார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி பொருளாளர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில், நம்மத்தியில்ஏற்பட்ட ஒற்றுமைகாரணமாக தென்னிலங்கைக்கட்சிகள் அச்சமடைந்துள்ளன. அதனால் பேச்சுவார்த்தைக்கும் அழைக்கின்றன. தமிழர் பிரச்னை தீர்ந்ததாகக் கூறியவர்கள் தீரவில்லை என ஒப்புக்கொள்கிறார்கள். இந்நிலையில் எமது ஒற்றுமையைச் சிதறவிடக்கூடாது. தமிழ் ஈழம் பெறும் வரை அமரர் செல்வநாயகத்தின் பேரால் ஒற்றுமையைக் கட்டி வளர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## 'போட்டிதவிர்ப்புக்கு நாம் தயார்!' — இலங்கரத்ன

கொழும்பு, செவ்வாய்

நிலையான சுதந்திரக்கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு நாங்கள் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்யத் தயாராக இருக்கிறோம்" என்று கொலன்னாவையில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு ரி.பி. இலங்கரத்தின கூறினார்.

திரு. இலங்கரத்தின தொடர்ந்து கூறியதாவது: "ஆனால் சமசமாஜகட்சியும், கம்யூனிஸ்ட்கட்சி தொடர்ந்து இதேநிலையை கடைபிடித்துவந்தால் அடுத்த தேர்தலில் ஒரு சில தொகுதிகளில் மட்டும் அவர்கள் வெற்றிபெறுவார்கள்.

"உத்தேச சோஷலிசமுன்னணி, பிறந்த இடத்திலேயே அழிந்துவிடும். அடுத்ததேர்தலில், சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கியதேசியகட்சிக்கும் இடையில்தான் போட்டிஇருக்கும்."

(க)

## 'ஐ. தே. கட்சி 125 தொகுதிகளில் வெற்றிபெறும்'

அனுராதபுரம், செவ்.

அடுத்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் 125 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று வீவெல்கடவெல்ல என்ற இடத்தில் நடந்த ஐக்கிய தேசியககட்சிக் கூட்டத்தில் பேசுகையில் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். ஹுருள்ளே பேசும் போது கூறினார்.

திரு. ஹுருள்ளேமேலும்கூறிதாவது: தற்போதையஅரசாங்கம் தோட்டங்களை சுவீகரித்து அரசாங்க ஆதரவாளர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளது.

"அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வரும் என்பது எங்கள் கூட்டங்களுக்குத்திரளும் மக்களின்மூலம் அறிந்துகொள்ளலாம்" (க)

## மானிப்பாயில் ஐ.தே.க. எழுச்சிக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

ஐ. தே. கட்சியின் ஜனநாயக விடுதலை எழுச்சி விழாக் கூட்டம் இம்மாதம் 22-ம்திகதி மானிப்பாயில் நடைபெற இருக்கிறது. மானிப்பாய்த் தொகுதி ஐ. தே. கட்சிப் பிரதம அமைப்பாளர் திரு. எஸ். அலோசியஸ் தலைமையில் இக் கூட்டம் நடைபெறும்.

மேமாதம் 22-ம் திகதியை எழுச்சி விழாவாக நடத்தும்படி தலைமைப்பீடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நடைபெறும் இக்கூட்டத்தில் மானிப்பாய்த் தொகுதி முன்னணிப்பேச்சாளர்கள் கலந்து கொள்வர்.

## சோவியத் அரசு வழங்கும் புலமைப் பரிசுகள்

யாழ்ப்பாணம், புதன்

சோவியத் சோஷலிசக் குடியரசின் நுகர் கூட்டுறவுச்சங்கத்தினால் ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை ஊழியர்க்குச் சில புலமைப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. எதிர் வரும் செப்டம்பர் மாதம் முதல் பத்துமாத காலத்திற்கு இப்புலமைப் பரிசில் சம்பந்தப்பட்ட பாடத்திட்டம் நடைபெறும்.

உயர்மத்திய முகாமை மட்டத்திலான ஊழியர்களில் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காக இவ்வூழியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படவிருப்பதாக ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் உதவிச்செயலாளர் திரு. நீல. கே. அதிகாரம் சகல மாவட்டச் செயலாளருக்கும் அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பக்காரர்கள் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், தலைமைக்கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவுச்சங்கங்கள், மீன்பிடிக்கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்றும் வயதெல்லை 40 வயதுக்கு மேற்படாதிருக்கவேண்டும் என்றும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தி, ஆங்கில மொழிமூலம் இப்பாடத்திட்டத்தினை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல், அதிக குளிரைத் தாங்கக்கூடிய உடல்நிலைபோன்ற தகைமைகள் அவசியம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(கா—அ)

## நாளை மண்டலாபிஷேக பூர்த்தி

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகி அம்பாள் கோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா சங்காபிஷேகம் தண்டிகை உற்சவம் நாளை வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. காலையில் சங்காபிஷேகமும் அதன்பின் கும்பாபிஷேக மலர் வெளியீடும் அன்னதான முமம இரவு தண்டிகை உற்சவமும் நிகழும்.

(அ)

## 'மக்கள் அரசு நிறுவப்படும்' - தேரோ

அனுராதபுரம், செவ்

மக்கள் அரசாங்கத்தை அமைப்பதுதான் ஐக்கிய தேசி

(7-ம் பக்கம் பார்க்க)

## 'செல்வாவின் மறைவு தொழிலாளருக்கு பேரிழப்பு'

சங்கானை, செவ்.

"மூதறிஞர் செல்வாவின் இழப்பு இந்நாட்டுத் தொழிலாளர்சமுதாயத்திற்கும் தமிழ் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாதபேரிழப்பாகும்"

இவ்வாறு இலங்கை கூட்டுறவுப் பணியாளர் சங்க வடபிராந்தியக் கிளையின் முன்னாள் உபதலைவர் திரு. த. இராசதுரை தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இக்கிளையின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. இராசதுரை மேலும் பேசுகையில், அமரர் செல்வா விட்டுச்சென்ற பணியை நாம் கருத்து வேறுபாடின்றி தொடர்ந்து செய்தலே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும் என்றார்.

திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் உரையாற்றுகையில், எமது இனம் ஒரு சிறந்த சட்டவல்லுநரையும் சமதர்மவாதியையும் இழந்து தவிக்கும்நிலைக்குள்ளாக்கியுள்ளது. சங்கானை ப.நோ. கூ. சங்க வேலை நிறுத்தத்தின் போது வேலைநிறுத்தத்தை உடன் தீர்த்துவைப்பதுடன் பொதுமக்கள் கஷ்டத்தையும் தீர்க்க துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறுபிரதமரை அவசர செய்தி மூலம் மூதறிஞர் கேட்டதை தொழிலாளரும் தொழிற்சங்கவாதிகளும் பொதுமக்களும் என்றுமே மறக்க முடியாது" என்றார்.

யாழ் மாநகரசபை ப. நோ. கூ. சங்கக்கிளைச் செயலாளர் திரு. இலட்சிய பூபதியும் உரையாற்றினார்.

கூட்டத்தின் பின் முதல் நிகழ்ச்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களான அமரர்கள் எம். திருச்செல்வம், ஜி. ஜி. பொன்னம்பலம், மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர்க்கும் யாழ். மாநகரசபை ப. நோ. கூ. சங்க நுகர்ச்சி முகாமையாளர் அமரர் சிவானந்தனுக்கும் இரு நிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

மறைந்த தலைவர்களின் அனுதாபப் பிரேரணை ஏகமனதாக நிறை வேற்றப்பட்டு அவரவர்கள் குடும்பத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:-

ஆலோசகர் முன்னாள் வடபிராந்தியத்தலைவர் திரு. செ. சிற்றம்பலநாதன், தலைவர் திரு. எஸ். திரு. கே. திருச்சிற்றம்புலம், உபதலைவர் திரு. த சிவசுப்பிரமணியம், செயலாளர்: திரு. த. இராசேந்திரம், உப-செயலாளர்: திரு. எஸ். வீரக்கோன். 21 பேர்கொண்டநிர்வாக சபையும்தெரிவு செய்யப்பட்டது. (இ)

## இயக்குநர் சபை

மட்டுநகர், செவ்.

ஈச்சந்தீவு-கன்னன்குடா பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையின்புதிய உறுப்பினர்களாக திருவாளர்கள்: ஞா. சிவசண்முகம், க. வேலாயுதம் ஜே. பி, க. பரமேஸ்வரராஜா, வ. குணரெட்ணம், மா. நடராஜா, க. தர்மலிங்கம் ஆகியோர் மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மின்சார வசதி

நிந்தவூர் வட்டாரத்தைச் சேர்ந்த ஒலுவில் அல்-ஹம்ரா வித்தியாலயத்திற்கு தற்போது மின்சார வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

# "சுயநலத்தைத் துறந்து தமிழரின் விடுதலைக்கு உழையுங்கள்"

தமிழர்களின் உரிமைகளுக்காகப்போராடிய அஞ்சாநெஞ்சம் படைத்த கீர்த்திமான்களாகிய அந்த இருபெரும் தலைவர்களின் உருவச்சிலைகள் புடைசூழ இன்று இங்கே நிற்கின்றேன். சேர் பொன்னம்பலம் இராமநாதனின் சிலை வலப்புறமாகவும் சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் சிலை இடப்புறமாகவும் நிற்க, இந்த மாண்புமிகு சபையிலே நின்று தமிழ்மக்களுக்கு ஒரு செய்தி சொல்ல விரும்புகிறேன்:

## தமிழரின் விடுதலைக்கு உழையுங்கள்

மனம் தளராதீர்கள், பழம் பெரும்புகழ் மண்டிய பாரம்பரியம் உங்களுக்கு உண்டு. நிகழ்காலத்தைத் துரோகிகள் விலைகூறிவிற்றிருக்கலாம். பழம்பாரம்பரியத்தைப் போன்ற பெருமைவாய்ந்த எதிர்காலமும் ஒன்று உங்களுக்கு வரத்தான்போகிறது. ஆனால் அதற்காக உழைக்க வெண்டும். சுயநலத்தைத் துறந்து தமிழரின் விடுதலைக்காக உழையுங்கள், சர்வகலாசாலைகள் கல்லூரிகளின் மாணவர்கள் பட்டி தொட்டிகளிலும் கழனிகளிலும் தொழிற்சாலைகளிலும் காரியாலயங்களிலும் தொழில் பார்க்கும் வாலிபர்கள், எல்லாரும் இடையுறாது உழைக்கவேண்டும். விடுதலை என்னும் இலட்சியத்தை அடையும்வரை தளரக்கூடாது.

## விவாத மேடை

பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் 18-12-1949இல் இலங்கையின் நாலாபக்கங்களிலுமிருந்து வந்த தமிழர்கள் மகாநாடுகூடி தமிழரசாரும் உரிமையே தமது இலட்சியம் என்று தீர்மானித்தார்கள். இன்று நான் சொல்லுகிறேன். சுயாட்சி இல்லையானால் அந்த உரிமை நமக்கு வராது. அந்த லட்சியத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்வோம். கொஞ்சமும் தளரவிடக்கூடாது. சோல்பரித் திட்டத்தை ஏற்பதா விடுவதா என்ற விவாதம் நடந்த காலத்தில் நமது சிங்களச் சகோதரர்கள் கெஞ்சிக் கேட்டார்கள். அதை அமுல் நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரும்படியாக, பரீட்சித்தாவது பாருங்கள் என்றார்கள். 20 ஆண்டுகளாக ஒத்துழைப்புக் கொடுத்துப் பார்த்துவிட்டோம். இன்னும் 20 வருடம் அது அமுலில் இருக்குமானால் தமிழர்கள் குற்றேவல் புரியும் அடிமைகளாக மாறிவிடுவார்கள் என்பது திண்ணம். இதை நான் மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழனும் உணர்ந்துவிட்டான். சுயாட்சி ஒன்றுதான் நமது பிரதேசத்தை நாமே ஆளும் உரிமையைத் தரும், சுயாட்சி ஒன்றுதான் சகல விஷயங்களிலும் சமஉரிமையைத்தரும், சுயாட்சி ஒன்றினால்தான் நமது மொழி, கலை, கலாச்சாரம், மதம்-சுருங்கச் சொன்னால், சரித்திரத்தின் வைகறைக்காலம் தொட்டு சந்ததி சந்ததியாக நமது தமிழ் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற பழம்பெரும் பாரம்பரியத்தைப்பேணிப் பாதுகாக்கமுடியும்.

அக்கிராசனர் அவர்களே தமிழிலும் சில வார்த்தைகள் கூறி எனது பேச்சை முடிக்க விரும்புகிறேன். மாவட்ட சபைகள் சம்பந்தமான வெள்ளை அறிக்கை சபையில் விவாதிக்கப்படும் இந்த நேரத்தில் இதை எதற்காகத்தான் தமிழரசுக்கட்சியினர் ஏற்றுக்கொள்ள விரும்புகிறார்களோ என்று என் மனம் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அதன் சரத்துக்களில் முக்கியமாக மொழிபற்றிய சரத்தை எடுத்துப்பார்த்தால் மீளமுடியாத வகையிலே தமிழ்பேசுகின்ற இனம் உள்ளது. சிங்களம் மாத்திரம் என்ற கொள்கைக்கு எதிராக இவ்வளவு காலமும் நாம் நடாத்தி வந்த இயக்கத்தைக் கடைசியாகக் கைவிட்டு விடுகிறோம் என்பதைத் தவிர அதற்கு வேறு அர்த்தம் எதையும் கொடுக்க முடியாது.

தமிழ்ப் பிரதேசங்களில் அமைக்கப்படப் போகின்ற மாவட்டசபைகளிலே அதாவது யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட சபைக்காரியாலயங்கள் என்ன முறையில் இயங்கப்போகின்றன என்பதை நாம் உத்தேச மசோதாவின் 23-வது சரத்தைப் பார்த்து ஓரளவு ஊகித்துக் கொள்ளமுடியும். நாங்கள் சொல்லிவந்தோம், தமிழ்ப் பகுதிகளிலே உள்ள மாவட்ட சபைகள் எல்லாம் தமிழிலேயே இயங்கவேண்டும் என்று. தமிழிலேதான் அவற்றின் நடவடிக்கைகள் இருக்கவேண்டுமென்றும், தமிழிலேதான் தஸ்தாவேஜுகள் கோவைகள் இருக்கவேண்டுமென்றும் நாங்கள் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். அரசாங்க ஊழியர்கள் தாங்கள் சிங்களம் படிக்கவேண்டுமா இல்லையா என்று கேட்டுவந்த காலங்களில் நாங்கள் அவர்களுக்குச் சொன்னது "எங்களுடைய எதிர்ப்பு இன்னும் இருந்துகொண்டு வருகிறது. மாவட்டசபைகள் ஏற்படும் பொழுது அந்த மாவட்ட சபைகளுக்கு நீங்கள் மாற்றலாகிச் செல்லலாம். அங்கு நீங்கள் தமிழிலே கருமமாற்ற வேண்டிவரும். ஆகவே கொஞ்சம்பொறுங்கள்" என்பதுதான்.

இன்றைக்கு இருக்கும் நிலை என்ன? மாவட்டசபைகள் எல்லாம் உத்தியோகபூர்வமாக சிங்களத்தில்தான் நடக்க வேண்டும் என்ற விதியை ஏற்றுக்கொண்டு, வேண்டுமாக இருந்தால் தமிழிலும் மொழிபெயர்ப்புவைக்கலாம் என்பதுதான் இன்றுள்ள உண்மையான நிலையாகும். ஆனால் மத்திய அரசாங்கத்துடன் தமிழிலே தொடர்புகொள்ள முடியாது. கௌரவ பிரதமர் அவர்கள் சில மேடைகளில் சொன்னதாகப் பத்திரிகைகளில் ஒரு விடயத்தை அவதானித்தேன். அதாவது "இந்த மாவட்டசபைகளுக்குக் கிராம சபைகளுக்குரிய உரிமைகள் கூட இல்லை. ஆனபடியால் சகோதரர்களே, ஏன் பயப்படுகிறீர்கள்" என்று பிரதமர் அவர்கள் சிங்கள மக்களுக்குக் கூறியிருந்தார்கள்.

இன்று எந்தக் கிராமச்சங்கத்தையோ, பட்டணசபையையோ, மாநகரசபையையோ எடுத்தாலும் சரி, அந்த உள்ளூராட்சிமன்றங்கள் ஒவ்வொன்றும் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழிலும் சிங்களப் பிரதேசங்களில் சிங்களத்திலும் கடமையாற்ற உரிமை உண்டு ஆனால் மாவட்டசபைகளுக்கு இந்த உரிமைகள் கிடையாது. மத்திய அரசாங்க அமைச்சரோடு உள்ளூராட்சி மன்றங்கள் இன்று தங்கள் தாய்மொழியில் தொடர்பு கொள்ள உரிமை உண்டு. ஆனால் இந்த மாவட்ட சபைகளுக்கு இந்த உரிமை கிடையாது.

கௌரவ யாழ்ப்பாணப் பிரதிநிதி (திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்) அவர்கள் எவ்விடத்திலோ கூறியதை வாசித்துப் பார்த்தேன். இந்த மாவட்ட சபையை ஏன் சிங்கள மக்கள் எதிர்க்கிறார்கள் என்று அவர் ஆச்சரியப்பட்டிருக்கிறார். நானும் அப்படித்தான் இந்த மாவட்டசபை மசோதாவை சிங்கள மக்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்று ஆச்சரியப்படுகிறேன். அவர்கள் எதற்காக எதிர்க்கிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. அவர்கள் இரண்டு கைகளையும் நீட்டி வரவேற்கக்கூடிய சட்டம்போல இது தெரிகிறது.

அக்கிராசனரவர்களே, கிரேக்க நாட்டுக் கதை ஒன்றிருக்கிறது. ஹோமர் என்ற இரேக்க கவிஞர் எழுதிய இலியட் என்ற கதையிலே ரோய் என்ற நாட்டிலே ஒரு அழகான நங்கையைத் தூக்கிக் கொண்டுபோய் அந்த ரோஸ்அரண்மனைக்கோட்டைக்குள் சிறை வைத்திருந்தார்கள். அவளை மீட்கச் சென்ற சைனியத்தினால் அந்த ரோய் நகர அரணுக்குள் போக முடியாமல்போய் விட்டது. அதனால் அந்தச் சைனியத்தினர் ஒரு தந்திரத்தைக் கையாண்டனர். பிரமாண்டமான ஒரு மரக்குதிரையைச் செய்து அதற்குள்ளே ஆயுதம் தாக்கிய போர் வீரர்களை மறைத்து வைத்து அந்தக் குதிரையை ரோய்நகர மக்கள் பார்வையிடக்கொண்டு வருகிறோம் என்று இழுத்துக் கொண்டு போனார்கள். கோட்டையின் கதவுகள் திறக்கப்பட்டன. அந்த மரக்குதிரையை இழுத்துக் கொண்டு போய் நகரத்தின் மத்தியில் விட்டார்கள். இரவு வந்ததும் போர்வீரர்கள் வெளியேவந்து ரோய் நகரத்தைக் கைப்பற்றினார்கள். அந்தக் கதையில் திரும் குதிரையைப் போன்றதுவான் இந்த மாவட்டசபை மசோதாவும் என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும்.

எத்தனையோ ஆண்டுகளாக தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களம் மாத்திரம் இயக்கத்தை மக்கள் நேரடியாக எதிர்த்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களது எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் சிந்தித்துக் கொண்டிருந்த அரசாங்கம் இப்பொழுது இந்த மசோதா மூலமாக நிச்சயமாக வெற்றி பெறத்தான் போகிறார்கள் என்பது மசோதாவை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் புலனாகும். நேரடியாகத் தாக்கி அந்த எதிர்ப்பைச் சமாளிக்க முடியாதவர்கள் இப்பொழுது மறைமுகமாக வேறொரு உபாயத்தைப் பிரயோகித்து அந்த எதிர்ப்பை வெல்கிறார்கள். அதற்குத் தமிழரசுக்கட்சியும் உடந்தையாக இருக்கிறதே என்று நினைக்கும்பொழுது கவலை கொள்ள வேண்டியிருக்கிறது.

**வ. நவரத்தினம்**
**தலைவர், சுயாட்சிக்கழகம்**

(திரு. என். டென்சில் பெர்ணாண்டோ-நீர்கொழும்பு)
எங்களுடைய பிரதமர் ஒரு பொழுதும் அப்படியான காரியத்தைச் செய்யமாட்டார்.
(திரு. வீ. நவரத்தினம்)

### சிங்கள மக்களை பாதுகாப்பது பிழையல்ல

நான் கௌரவ பிரதமரைச் சொல்லவில்லை. கௌரவ பிரதமரைப் பொறுத்தவரையில் நான் குறையெதுவும் கூறவில்லை. ஏனென்றால் சிங்கள மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது சிங்களத் தலைவர்களுடைய கடமை. அது அவர்களுடைய பிரதான கடமை அந்தக் கடமையிலே அவர்கள் செயலாற்றிக் கொண்டுவந்தால் நான் ஒரு போதும் பிழை சொல்லமாட்டேன். தமிழமக்கள் தெரிந்தெடுத்து அனுப்பிய பிரதிநிதிகளுடைய கடமை தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது, ஆனால் அவர்கள் அதிலிருந்து தவறுகிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. சிங்களத் தலைவர்கள் தங்களுடைய மக்களின் உரிமையை எவ்வளவு தூரம் பாதுகாக்க முடியுமோ அவ்வளவுதூரம் பாதுகாக்க வேண்டியது அவர்களது கடமை. அதற்காக அவர்களை நாம் குறைசொல்ல முடியாது.

ஆனால் அதேநேரத்தில் அதே போன்ற ஒரு கடமையைத் தம் தலைமீது சுமந்து கொண்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் - தேர்தல் காலத்தில் நாங்கள் எங்களுடைய உரிமைகளைப் பெறும்வரை பதவி ஏற்கமாட்டோம், சிங்களம் மாத்திரம் என்ற இயக்கத்தைக் கடைசிவரை எதிர்த்தே தீருவோம் என்பது மக்களுக்கு வாக்குக் கொடுத்து இந்தச் சபையிலே அங்கத்துவம் பெற்றவர்கள் - அந்த வாக்கைக் காற்றிலே பறக்க விட்டு இப்பொழுது இரண்டு கைகளையும் நீட்டி தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள மாவட்ட சபைகள் சிங்களத்தில்தான் இயங்க வேண்டும் என்ற விதியை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அதை என்னவென்று சொல்வது என்றுதான் கேட்கிறேன். இந்தக் கடைசிநேரத்திலாவது நான் எனது தமிழரசுக்கட்சி நண்பர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் இந்த மசோதாவினால் எந்த விதமான பிரயோசனமுமில்லை. நாம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அவற்றை விட்டுக் கொடுப்பதாகத்தான் முடியும். ஆகையால் இதனை வற்புறுத்த வேண்டாம் என்பதுதான். எங்கள் இயக்கம் இயக்கமாகவே இருந்துவரட்டும். இன்று இல்லாவிட்டாலும் இன்னும் எத்தனையோ வருடங்களின் பின்னராவது நாம் எங்கள் இலட்சியத்தை அடையமுடியும். அதற்காக இடையிலே ஓரளவு சலுகைகளைப் பெற்றுக்கொள்வோமென்ற சுதந்திரன் அறிக்கைகளை நான் வாசித்துப்பார்த்தேன். அதைப் பார்க்கும்பொழுது எனக்கு மிகவும் கவலையாகத்தான் இருக்கிறது.

சோல்பரித் திட்டம் இந்த நாட்டுக்குத் தரப்பட்டபொழுது திருவாளர்கள் ஈ. டபிள்யூ. பெரேரா, டொக்டர் தகநாயக்கா போன்றவர்கள் அதனை எதிர்த்தார்கள். அதற்குப் பிறகு அந்த சோல்பரித் திட்டத்தின் மூலம் பூரண சுதந்திரம் இலங்கைக்கு வரவில்லையா என்ற உவமையைக் கௌரவ காங்கேசன்துறைப் பிரதிநிதி [திரு. எஸ். ஜே. செல்வநாயகம்] அவர்கள் எடுத்துக்காட்டி, அதேபோல இந்த மாவட்டசபைகள் எந்த விதமான அதிகாரம் உள்ளனவாய் இல்லாதுபோனாலும் அவற்றை இப்பொழுது வரவேற்போம். அதனை வைத்துக் கொண்டு படிப்படியாக அதிகாரங்களைக் கூட்டிக்கொள்ளலாம் என்ற கருத்துப்பட அறிக்கை விட்டிருக்கிறார். இந்த இரண்டையும் ஏனோ இப்படியாக ஒற்றுமை கண்டாரென்பது எனக்கு விளங்கவில்லை. அந்த விஷயம் வேறு, இந்த விஷயம் வேறு. இந்த மாவட்டசபைகள் மூலமாக, இவ்வளவு காலமும் எதிர்ப்பு இயக்கங்கள் நடத்திவந்த நாம் பூரணமாகச் சரணாகதி அடைகிறோமென்பதை விளங்காமல் இந்தக் கூற்று வந்தது என்பதுதான் எனது கவலை.

என்னைப் பொறுத்தவரையில் கூறுகிறேன், தமிழ்பேசும் மக்கள் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. தொடர்ந்தும் எங்கள் எதிர்ப்பு இயக்கத்தை நடத்திக்கொண்டே வரவேண்டும். இந்த நாடு எங்களுக்கும் சொந்தமானது. இந்த நாட்டில் எவராலும் நாம் இராணுவ முறையில் வெல்லப்பட்டவர்கள் அல்ல. சந்தர்ப்ப சூழ்நிலை வசமாக மேற்கத்தைய நாடுகள் எமது நாட்டைக் கைப்பற்றியபொழுது எங்கள் பகுதிகள் புறம்பாகவே கைப்பற்றப்பட்டன. ஏனைய பகுதிகளும் புறம்பாகவே கைப்பற்றப்பட்டன. சோல்பரிக் கமிஷனின் ஓரவஞ்சகத்தின் காரணமாக இன்று நாம் இந்த நாட்டில் சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் வாய்ந்தவர்

(7-ம் பக்கம் பார்க்க)

## வேலரும் மயிலரும்



வேலர்: ஏழு வருஷமாகக் கண்ணுக்குத் தெரியாத குறைகள் இப்பதான் நம்ம அரசியல்வாதிகள் கண்ணுக்குத் தெரியுது.

மயிலர்: ஆந்தைக்கு இரவில்தான் கண் தெரியும்; அரசியல்வாதிக்குத் தேர்தல் காலத்தில்தான் கண் தெரியும்.

—சுந்தர்

# "கலை ஒருவட்டத்தினுள் அடங்கிவிடக் கூடாது"

—கலாநிதி சண்முகதாஸ்

யாழ்ப்பாணம், புதன்

''நாம் தமிழர்கள்; நமக்கென்றொரு நீண்டகால வரலாறு, கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் என்பன உண்டு. அத்தகைய வரலாறுகளையும் பண்பாடுகளையும் நாம் பேணிக்காக்கவேண்டும்.'' இவ்வாறு கட்டப்பராய் கலைமணி சனசமூக நிலையத்தின் 28வது ஆண்டு நிறைவு விழாவிலும், மங்கையர் கழகத்தின் 20வது நிறைவு விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய கலாநிதி அ. சண்முகதாஸ் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

''யாழ்ப்பாணம் பழம்பெரும் புகழ் வாய்ந்த கலை திகழும் நாடாகும். உழைப்பு, இலட்சியம் என்பனவற்றால் உயர்ந்த தமிழன் ஓய்வுநேரங்களிலே புதிய புதிய இலக்கியங்களைச் சிருஷ்டிக்கிறான். ஆரம்பத்திலே நம் இலக்கியங்கள் நாட்டுக் கூத்துக்களாக அறிமுகமாகி அவற்றிலிருந்து இயல், இசை, நாடகம் என்று பரிணமிப்பதாயிற்று.'

''இன்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் வடமோடி, தென்மோடி என்ற இருவகை நாட்டுக்கூத்து முக்கியத்துவம் பெறுவதை நாம் காணலாம். வடமோடி வீரத்தையும், தென்மோடி காதலையும் போற்றுகின்றன. இத்தகைய நாட்டுக் கூத்துக்களிலிருந்தே சிங்கள நாடகங்கள் என்பன உருவாகின. நாட்டுப் பாடல்கள் சுவை நிரம்பியனவாகத் தாம் எடுத்துக்கொண்ட பொருட்களைச் சொல்லிசையால் வலியுறுத்தத் தக்கன. பெண்கள் மாவு இடிக்கின்றபோதுகூட, இடிக்கின்ற ஓசை நயத்துடன் பாடக்கூடிய பாடல்களும் உள்ளன. இத்தகைய பாடல்கள் பாமர மக்களிடையே பரவி இருந்தன. ஆனால் இன்றைய நவீன இசையும் நாடகமும் அழைப்பிதழ்கள் அனுப்பப்படுகின்றவர்களுக்கே உரியது. அந்த நிலை மாறி இலக்கியங்கள் பொதுமக்களிடையே வந்து சேரவேண்டும். தமிழ் நாடு, கங்கை, கடாரம், ஈழம் இவற்றையெல்லாம் ஒன்றிணைத்துப் பேரரசு அமைத்த சோழமன்னர் காலத்தில் இலக்கியங்கள் மக்களின் சொத்தாக இருந்தன. கோவில்கள் கலையின் பொக்கிஷங்களாகத் திகழ்ந்தன. நடன அரங்கேற்றங்களா, கவியரங்கேற்றமா இவையெல்லாம் கோவில் சந்நிதானத்திலேயே அரங்கேறின. ஆனால் இன்று சிறந்த கலைகளை அழைக்கப்பட்ட ஒருசிலர் மட்டுமே அனுபவிக்கின்றனர். இந்நிலை முற்றிலும் மாறிப் பொதுமக்களிடம் அவை சேரவேண்டும். அதற்கு இத்தகைய விழாக்கள் பெரிதும் உதவியாக இருக்கும்.''

திரு. எம். கே. அந்தனிசில் பேசுகையில் ''இந்த நாட்டை ஆண்ட இனம், தமிழினம் என்பதைச் சரித்திரம் கூறும். 13ம் நூற்றாண்டில் ஈழத்திற்கு யாத்திரை வந்த ஒரு முஸ்லிம் யாத்திரிகர் சிவனொளிபாத மலைக்குச் செல்வதற்கு வழி தெரியாது தவித்தபோது இந்த நாட்டை ஆண்ட தமிழ்மன்னன் அவனுக்கு உதவிசெய்ய சிவனொளிபாதமலைக்கு வழி காட்டினான். இன்று எல்லா மதத்தவரும் தமது மலை என்று சொந்தம் கொண்டாடும் சிவனொளிபாதமலை ஒரு தமிழ் மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததென்பதை வரலாறு வலியுறுத்துகின்றது. நாம் நமது கலை, கலாச்சாரத்தைக் காத்துத்தீரவேண்டும். பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தை கார்ல்மார்க்ஸ் கூட ஓரினம் சுதந்திரம் பெற்று வாழ அதற்கென்று ஒரு மொழி, கலாச்சாரம், தனி நாடு தேவையென்று கூறினார்'. என்றார். [கா-அ]

டெவன்தோட்டதுப்பாக்கிச் சூட்டுச்சம்பவம்:

# நஷ்டஈடு வழங்கவேண்டும்!

## பிரதமருக்கு கோரிக்கை

கொழும்பு, செவ்.

டெவன் தோட்டத் துப்பாக்கிச் சூட்டில் பலியான மலையக இளைஞன் குடும்பத்திற்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றும் இம்மரணம் பற்றி விசாரணை செய்ய விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவேண்டும் என்றும் பிரதமரையும், காணி அமைச்சரையும் கொழும்பு த. வி. கூ. கிளை, தமிழ் மகளிர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை என்பன தந்திமூலம் கேட்டுள்ளன. (ம-உ)

## ஊரெழுவில் புதிய சந்தை

நீர்வேலி, செவ்வாய்

உரும்பிராய்-ஊரெழு பட்டின சபையின் நிர்வாகத்தில் உள்ள ஊரெழு அம்மன் கோவில் காணியில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் சுமார் 15,000 ரூபாசெலவில் ஓர்புதிய சந்தை கட்டுவதற்கான அத்திபாரக் கல்லை வலிகிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு.க. மாணிக்கவாசகர் நாட்டிவைத்தார். (க

## சமாதான நீதவான்



யாழ்ப்பாணம், புதன்

வட்டுக்கோட்டைஊர்மன்ற உப தலைவர் திரு. நாகலிங்கம் இரத்தினசிங்கம் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் இவர் யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஆசிர்வாதம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துபதவி ஏற்றுக்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி பிரதான அமைப்பாளரான இவர் முன்னாள் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் செயலாளருமாவார். (இ)

## கிடங்கில் விழுந்து மரணம்

வேலணை, செவ்வாய்

குழாய்கள் பொருத்துவதற்கு தெருவில் கிடங்கு வெட்டிக் கொண்டிருந்த ஒருவர் அதே கிடங்கில் விழுந்து மரணமானார்.

இச்சம்பவம் வேலணையில் இடம்பெற்றது. நாகலிங்கம் இரத்தினம் (வயது65) என்பவரே மரணமானவராவர்.

வேலணை கிராமச்சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கென ஆரம்பிக்கப்பட்ட திட்டமொன்றிலே மேற்படி இறந்தவர் வேலை செய்து கொண்டிருந்த பொழுதே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது மரண விசாரணை நடைபெறுகின்றது.

## மண்டப பூர்த்திவிழா

யாழ்ப்பாணம், புதன்

புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவிலில் இன்று பகல் மண்டப பூர்த்தி விழாவும், கும்பாபிஷேகமலர் வெளியீட்டுவிழாவும் நடைபெற உள்ளது.

பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை தலைமையில் நடைபெறும் மலர் வெளியீட்டு விழாவில், சிவஸ்ரீ.ஐ.கைலாசநாதக்குருக்கள், ஆத்மஜோதி முத்தையா, பண்டிதை தங்கம்மா, அப்பாக்குட்டி புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் மலர் ஆய்வுரை செய்வார்கள். திரு.நா.க மயில்வாகனம் சிறப்புப் பிரதிகளை வழங்குவார். பஞ்ச மூர்த்திகளுக்கும் தனித்தனியே சங்காபிஷேகங்களும் நடைபெறும். அன்னதானமும் இடம்பெறும். (உ)

## முதன் முதலாக நடந்த போட்டி

மட்டக்களப்பு,செவ்வாய்

ஏச்சந்தீவு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மங்கிகட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், முதன் முறையாக விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் அதிபர் திரு. க பிள்ளையான் ஒழுங்குகள் செய்திருந்தார். போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.வீ. சின்னத்தம்பி பரிசுகளை வழங்கினார்.

## கலை விழா

பண்டத்தரிப்பு,செவ்வாய்

பண்டத்தரிப்புப் பட்டண சபை பிரதேசத்திலுள்ள சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கலைவிழா இம் மாதம் 28ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி, மரதன் ஓட்டப்போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி, நடனம் நாடகம் முதலான கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (அ)

## 80 வயது வயோதிபர் பஸ்மோதி மரணம்

யாழ்ப்பாணம், புதன்

இ. போ. ச. பஸ்ஸினால் மோதப்பட்டு 80 வயது வயோதிபர் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் மாகியப்பிட்டி சந்திக்கருகாமையில் நடைபெற்றது.

எம். சித்தர்என்ற இவ்வயோதிபரது மரணம் குறித்து யாழ். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு.எஸ்.எஸ்.பிரான்சிஸ் விசாரணை நடத்தினார்.

சம்பவதினம் கீரிமலையில் இருந்து வந்த பிரஸ்தாப பஸ்ஸுக்கு முன்பாக காலஞ்சென்றவர்விழுந்ததனையடுத்து யாழ். பெரியாஸ்பத்திரியில் இரு கால்களும் முறிந்தநிலையில் இவர் மரணமடைந்ததாக சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி மேல்விசாரணையை ஒத்திவைத்தார்.

பஸ்சாரதியான சி. சின்னராசா என்பவரை மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யுமாறும் அவர் உத்தரவு பிறப்பித்தார். (உ)

## யாழ். லயன்ஸ் கழகம் நிதி கையளிக்கும்

யாழ்ப்பாணம்,புதன்

யாழ்.லயன்ஸ் கழகம் அண்மையில் நடத்திய களியாட்டு விழா மூலம் திரட்டப்பட்ட நிதி,புற்று நோய் சிகிச்சை நிலையம் நிறுவும் குழுவிடம் எதிர்வரும் சனிக்கிழமை கையளிக்கப்படும். எதிர்வரும் சனிக்கிழமை 21-ம் திகதி மாலை 4 30 மணிக்கு நல்லூர் யாழ். இன்ஸ் விடுதியில் நடைபெறும் ஒரு வைபத்தில்இந்நிதி கையளிக்கப் படவிருக்கிறது.

நெற்பயிரைப் பாதிக்கும் எல்லாப் பூச்சிப் புழுக்களையும் கட்டுப்படுத்த



BAYER

லெபேசிட்




நெற்பயிரில் சந்துகுத்தி, இலை அரிப்புழுக்கள், மூட்டைப்பூச்சி தத்துக்கிளி உட்பட மற்றும் பூச்சிப்புழுக்களையும் ...

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம லிமிட்டெட,

400 மாளிகாவத்தை ரோட் கொழும்பு 10

Melville Assauw Designs

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி ஞாயிறு 10-30
சிவாஜி — பானுமதி
அம்பிகாபதி

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
கனிமுத்துப்பாப்பா

RIO (Jaffna) Daily 4 Shows
KIRK DOUGLAS
IN
HEROES OF TELEMARK

106-வது வெற்றித் தினம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரம் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

REGAL (JAFFNA)
Daily: 10-30 a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் (யாழ். நகர்)
ஃ முத்துராமன் ஃ சுஜாதா
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
விஜயகுமார் — லதா
நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)


## சுயநலத்தை...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

களாக இருக்கிறபடியால் பலம் இல்லாது இருக்கலாம். ஆனால் ஒன்றுபட்ட சமுகமாக உழைப்போமானால், ஒற்றுமையாக நாம் இயங்கமுடியுமாயின் காலாவட்டத்தில் எங்கள் உரிமைகளை நாம் மீண்டும் பெறலாமென்ற நம்பிக்கை எனக்குண்டு.

கடந்த இருபதாண்டுச் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், கட்சியின் இயக்கங்களை எடுத்துப்பார்த்தால் தமிழ்மக்களின் பலத்தை உணராமல் இருக்கமுடியாது. ஏன் இவ்வளவு கெதியிலே தமிழரசுக்கட்சியினர் களைத்துப்போய்விட்டார்கள், மனம் சோர்ந்துவிட்டார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. கட்சியினர் மனம் சோர்ந்து களைத்துப் போனாலும் இலங்கை வாழ் தமிழ்மக்கள் களைக்கவில்லை. எமது உரிமைகளை மீண்டும் பெறுவோமென்ற தீர்மானத்துடன் தமிழ்மக்கள் இருக்கிறார்கள் என்பதைப் பகிரங்கமாகச் சொல்லி, எனக்கு இந்த நீண்ட நேரத்தைத் தந்ததற்காக உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். [முற்றும்]

## மக்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யக்கட்சியின் நோக்கமாகும் என்று மிகிந்தலைத் தொகுதியில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் வண. அமரவன்ச தேரோ கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: 'தேர்தலைப் பின்போடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் உரியநேரத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலையீட்டால் முறியடிக்கப்பட்டுவிட்டது. இந்நாட்டு மக்கள் ஐக்கியதேசியக் கட்சிக்கும் அதன் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் கடமைப்பட்டவர்களாவர்.

'ஐக்கியதேசியக் கட்சியினர் பிரசாரக்கூட்டங்கள் நடாத்துவது, பிரதமரையும் மந்திரிகளையும் தாக்கிப் பேசுவதற்கல்ல. நாட்டின் நிலைமையை மக்களுக்குத் தெளிவாக விளக்கவே பிரசாரக் கூட்டங்கள் நடத்துகிறோம். (க)

# யாழ். மாநகரசபையின் தேர்தலை நடத்த கோரிக்கை

**யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு யாழ். மாநகரவரியிறுப்பாளர்சங்கம் கோரிக்கை எழுப்பியுள்ளது.**

றிம்மர்மண்டபத்தில் நேற்று முன்தினம் திரு. சு. செ. மகாதேவா தலைமையில் நடைபெற்ற யாழ். மாநகரவரியிறுப்பாளர் சங்கப்பொதுக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"யாழ். மாநகரசபைத் தேர்தலை உடன்நடத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டவேண்டும்" என்று வரியிறுப்பாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். மாநகரசபைத் தேர்தலை உடனே நடாத்துவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமையை நிலைநாட்டும்படி அரசைக் கோருவதெனவும் அவசரகாலநிலை அகற்றப்பட்டதால் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் 2-வது பிரிவு ரத்தாகிவிட்டதால் யாழ். விசேட ஆணையாளரை நியமித்தமை சட்டபூர்வமானதெனவும் இது தொடர்பாக இரண்டு ரிட் மனுக்களை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் உரையாற்றிய சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. செ. மகாலிங்கம் பேசுகையில், "தமிழ் பகுதிகளில் 6 மாநகரசபைகளும், 8 நகரசபைகளும், 26 பட்டினசபைகளும், 13 கிராமசபைகளும் விசேட ஆணையாளரின் நிர்வாகத்தில் உள்ளன. நாம் நமது உரிமைகளைச் சட்டபூர்வமாகச் பெறுமல் இருக்க முடியாது. நமது உரிமைகளைச் சட்டபூர்வமாக நீதிமன்றம் மூலமாக பெறும் நோக்குடன் இச்சங்கம் இங்குகூடியுள்ளது" என்றார்.

இக்கூட்டத்தில் சட்டத்தரணி திரு. ஆர். விசுவநாதன், திருமதி அந்தோனியா சுவாமிநாதர், திரு. நேசையா, சட்டத்தரணி திரு. சோமசுந்தரம் உட்படப் பலர் உரையாற்றினர். (கி-கெ)

# சந்தேகத்திற்கிடமான முறையில் இருந்தனராம்!

## 3 இளம் பெண்கள் கைது

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் கோவில் வீதியில் நீண்டகாலமாகப் பூட்டப்பட்டிருந்த வீடொன்றில் சந்தேகத்துக் இடமான முறையில் நடமாடிய தென்னிலங்கையைச் சேர்ந்த மூன்று இளம் பெண்களை யாழ். பொலிசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

குறிப்பிட்ட வீட்டின் அயலவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து யாழ். பொலிசார் அயல்வீட்டுக்குச் சென்று அம்பலாங்கொடையைச் சேர்ந்த நந்தசீலி (வயது-20) கமலா (வயது-17) சந்திரா (வயது-19) ஆகியமூவரையும் கைது செய்தனர்.

இப்பெண்களில் ஒருவர் ஜூங்கியுடனும ஒருபெண் பாவாடை சட்டையுடனும் மற்றவர் கவுடனும் காணப்பட்டனர்.

யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட மூவரும விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (இ)

## மனைவிகண்டிக்க கணவன் தற்கொலை

மாவிட்டபுரம், செவ்வாய் மனைவியின் கண்டிப்பைத் தாங்கமுடியாது கணவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

மயிலங்கூடலைச் சேர்ந்த அருளம்பலம் பரமலிங்கம் 35வயது என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். இவரது மரனம் குறித்து திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா நடத்திய விசாரணையில் காலமானவர் வியாபாரத்தில் நஷ்டமடைந்திருந்ததால் அவர் மனைவியே கமம்செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்ததாகவும் சம்பவதினம் தோட்டத்திற்குச் சென்று விட்டு தாமதமாக வந்தமையால் மனைவி அவரைக் கண்டித்ததாகவும் அதனால் அவர் மனமுடைந்து நஞ்சருந்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. சாட்சியங்களை அடுத்து தற்கொலை எனத் தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி காலமானவரின் மனைவியின் போக்கை பெரிதும் கண்டித்து இச்சம்பவம் மற்றவர்களுக்கு ஒருபாடமாக இருக்கவேண்டுமமென்றும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மனைவி கணவனை மீறிச் செயல்படக் கூடாதெனவும் எச்சரித்தார்.

## லட்சார்ச்சனை

தெல்லிப்பழை, செவ். மாவிட்டபுரம் அருள்மிகு மகாமாரியம்மன் கோவில் மூன்றுவது கும்பாபிஷேக இலட்சார்ச்சனை இம்மாதம் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. தொடர்ந்து 12 நாட்கள் விழா நடைபெறும்.

இலங்கையில் முதல்தடவையாக நவசக்தி அர்ச்சனைகள் மூலம் இந்த இலட்சார்ச்சனை நடைபெறுகிறது.

மாவை ஆதீனகர்த்தா சிவாகம வித்தியா பூஷணம் பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் தினசரி மாலை 6 மணிமுதல்தொடர்ந்து 12 நவசக்தி அர்ச்சனைகள் நடைபெற்று இலட்சார்ச்சனைபூர்த்தி செய்யப்படும். சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன. (ச)


வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈட்ஸ்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 2 வது வாரம்
வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்! இது ஞானவேல்!
யாவும் நிறைந்த தங்கவேல்! வருக! வருக!
நீமயிலேறி வருக!

திருவருளை தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளை காணாத கண்ணென்ன கண்ணோ

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்
கிருபானந்தவாரியார், நாகேஷ்,
சுந்தரராஜன், நடித்த
தேவரின்
திருவருள்
டைரக்ஷன்: ஆர். தியாகராஜன்
(ஈஸ்ட்மன் கலர்)



நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
பாபு


யாழ்ப்பாணம், புதன் அகில இலங்கை இருட்டகழ் மன்ற ஆதரவில் இன்று மாலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் கார்த்திகை விழா கொண்டாடப்படும்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவு விழாவில் இடம்பெறும்.

திரு ஜெயபாலன் இதற்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.


ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஃ ஜெய்சங்கர் ஃ விஜயகுமாரி ஃ அசோகன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பவானி

ஈழநாடு
The EELANADU

# பள்ளி மாணவி கடத்தப்பட்டார்!

## பட்டப்பகலில் யாழ். நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

பட்டப்பகலில் பள்ளி மாணவி ஒருவர் கடத்தப் பட்டார் பெரும்பரபரப்பை ஊட்டிய இச்சம்பவம் யாழ்ப்பாணம் ரெம்பிள்வீதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மன்னரைச் சேர்ந்த சுமார் 18 வயதான இம்மாணவி யாழ் நகரில் கல்வி கற்று வந்ததாகவும் சம்பவதினம் நண்பகல் சாப்பாட்டுக்குப் பின் அவர் மீண்டும் கல்லூரி சென்று கொண்டிருந்த போது சுமார் ஒன்றரை மணியளவில் திடீரென அங்குவிரைந்து வந்த காரில் அவர் கடத்தப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

சோக்கினல் இலக்கம்எழுதப் பட்ட பச்சை நிறமுடைய 'ஏ 40' கார் டெம்பிள் வீதி—ஆஸ்பத்திரி வீதிச் சந்தியிலிருந்துசுமார் 50 யார் தூரத்தில் ரெம்பிள் வீதியில் நிறுத்தப் பட்டு அவ்வீதி வழியாகக் கல்லூரிக்குசென்றுகொண்டிருந்த பிரஸ்தாப மாணவியை அக் காரிலிருந்தவர்கள் பலாத்காரமாக இழுத்துக் காரில் போட்டுக்கொண்டு கார் விரைந்து சென்றதாகவும், அச்சமயம் மாணவி கூக்குரலிட்டதாகவும் இதனை நேரில் கண்டவர்கள் அண்மையிலுள்ள கிராம சேவையாளரிடம் முறையிட்டனராம்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு புலனாய்வுத் துறைப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் தாமோதரம் தலைமையில் சார்ஜன்ட் இம்மானுவேல் புலனாய்வில் ஈடுபட்ட தன் பயனாக வி எல் 3626-ம் இலக்க கார் கைப்பற்றப்பட்டுக் காரச் சாரதியும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார், இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனைய சந்தேக நபர்களையும மாணவியையும் தேடி பொலிசார் வலை விரித்துள்ளதாகவும் பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

(கி-அ)

காங்கேசன் சிமெந்துத்தொழிற்சாலை:

# சட்டப்படி வேலை; உற்பத்தி

## பாதிப்பு! விநியோகமும் நிறுத்தம்!!

மாவிட்டபுரம், செவ்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், ஊழியர்கள் கடந்த 6ந் திகதி முதல் நடத்திவரும் சட்டப்படி வேலை இயக்கத்தினல் சிமெந்து உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனல் பாவனையாளர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த 10 தொழிற்சங்கங்கள் தமது 14 கோரிக்கைகளைமுன்வைத்து கடந்த 6ம் திகதிமுதல் சட்டப்படி வேலைஇயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றன இதனல் சிமெந்துத் தொழிற்சாலை வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சிமெந்து உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் எதிரொலியாகசிமெந்து கோரிவரும் விண்ணப்பங்களுக்கு சிமெந்து விநியோகிப்பது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்க கடந்த 10ம் திகதி வழங்கப்பட வேண்டிய தற்காலிகஊழியர்வேதனத்தையும் 13ம்திகதி வழங்கப்பட வேண்டிய தொழிலாளர் மேலதிக ஊதியத்தையும் வழங்குவதில் தொழிற்சாலை நிர்வாகம் தாமதம் செய்வதை எதிர்த்து கடந்த 13ம் திகதி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தி தமது கோரிக்கைகளை தொழிற்சாலை நிர்வாகத்திடம் சமர்ப்பித்தனர்.

கடந்த திங்கட்கிழமை ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை தொழிலாளர்கள் நடத்திய போது அசம்பாவிதங்களும் ஏற்பட்டதால் தொழிற்சாலையில் பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. தொழிற்சாலைக் காரியாலயமும் சிறு சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளை வென்றெடுக்கும்வரை தமது போராட்டம் தொடரும் எனதொழிற்சங்கக் கூட்டுக்குழுத் தலைவர் திரு. ச. கணபதிப்பிள்ளை நமது நிருபரிடம் தெரிவித்தார்.

# "பனங்கட்டி விலைவீழ்ச்சி சீரடைந்து வருகிறது"

யாழ்ப்பாணம், புதன்

'அரசாங்கத்தால் சீனியின் விலை குறைக்கப்பட்டதை அடுத்துத் தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கங்கள் உற்பத்திசெய்யும் பனங்கட்டி விற்பனையில் தளர்வுநிலை ஏற்பட்டுள்ளது. ஒருறுத்தல் பனங்கட்டி இப்போது ரூபா 3-50 தொடக்கம் ரூபா 3-75 வரை விற்கவேண்டியநிலை ஏற்பட்டும் சில சங்கங்களில் பனங்கட்டிகள் தேக்கநிலையில் உள்ளன'

இவ்வாறு பனம்பொருள் உற்பத்திகூட்டுறவுச்சங்க பகுதி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது;

'தற்போது வடமாகாணம் தவிர்ந்தவெளிமாகாணங்களில் உள்ள சில ப. நோ. கூ. சங்கங்கள் இப்பனங்கட்டிகளைக் கொள்வனவுசெய்ய முன்வந்துள்ளமையால் தற்போதைய விற்பனவுநிலை ஓரளவு சீரடையத் தொடங்கியுள்ளது இதுவரை 150 அந்தர் பனங்கட்டியை இச்சங்கங்கள் பெற்றுள்ளன. மேலும் பல சங்கங்கள் பெருமளவில் பனங்கட்டிகளை வாங்க முன்வந்துள்ளன. கடந்த ஆண்டு சீனியின்விலை ஏற்றமடைந்திருந்தபோது 1 றுத்தல் பனங்கட்டி 6 ரூபாவிற்கு விற்கப்பட்டது. விற்பனையும் துரிதமாக நடைபெற்றுவந்தது. பனங்கட்டியின் விலை வீழ்ச்சிக்கு சீனிவிலை குறைக்கப்பட்டதுமாத்திரம் காரணம் இல்லையென்றும் முன்பு ஒரு கூப்பனுக்கு முக்கால் றுத்தல் சீனி வழங்கப்பட்டது. ஆனல் தற்போது ஒருகூப்பனுக்கு ஒரு றுத்தல் சீனி வழங்கப்படுகின்றது.

இதனல் கூப்பனுக்கு வாங்கும் சீனியைப் பாவனையாளர்கள் சிலர் 4 ரூபா தொடக்கம் 5ரூபாவரை விற்கிறர்கள் அதுமட்டுமன்றி தனிப்பட்ட வியாபாரிகளிடம்தேவையான அளவு சீனியை ரூபா 5க்கும் பெறக் கூடியதாக உள்ளது. இதனலேயே பனங்கட்டி விற்பனை தளர்ச்சியடைந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் விறகு, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின்விலைகளும் அதிகரித்துள்ளமை பனங்கட்டி உற்பத்தியைப் பாதிப்பதாக உள்ளது. இந்தநிலையில் நிலைமையை எப்படியும் சமாளிப்பதற்கு கடந்தஆண்டு ஒரு போத்தல் பதநீரை 50 சதம் தொடக்கம் 60 சதம் வரை வாங்கிய சங்கங்கள் இன்று ஒரு போத்தல் பதநீரை 35 சதம் தொடக்கம் 40 சதம் வரை வாங்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

எனவே இத்தகைய சூழ்நிலையில் வெளிமாவட்டங்களிலுள்ள பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பனங்கட்டியை வாங்க முன்வருவது இத்தேக்க நிலையை ஒழிக்கத் தக்க நடவடிக்கையாகும் என்றும் அந்த அதிகாரி கூறினர்.

[கா-இ]

"யாழ். ஆயுர்வேத கல்லூரி

# நிர்வாகம் சம்பந்தமான வழக்கை வாபஸ்பெறுக"

## மாணவர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகள் இதுவரை நிறைவேருததற்குக் காரணமாக இருந்துவரும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் இறுதி ஆண்டுப்பரீட்சை நடைபெறுவதற்கு முன் புதிய மாணவர்களைச் சேர்க்கக்கூடாதென்றும் கடந்த ஆறுமாதங்களாக கல்லூரி நிர்வாகத்தினல் தடை செய்யப்பட்டு எவ்வித விசாரணையுமின்றி இருந்து வரும் மாணவர்களை உடன் கல்லூரியில் அனுமதிக்க வேண்டுமென்றும் கோரும்தீர்மானங்கள் பிரஸ்தாப கல்லூரி மாணவர் மன்றத்தின் அவசரப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டம் மன்றத்தலைவர் திரு. கே. வி. கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியில் நிலவி வரும் நிர்வாகச் சீர்கேட்டை நீக்கும் வகையில் புதிய இயக்குநர் சபை ஒன்றை அரசு நியமிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மாணவர் மன்றச் செயலாளர் திரு. ச. தவசீலன், திரு. செந்தில் நேசன், திரு. சிவாஜி திரு. வே. சிவபாலன் உட்படப் பலர் உரையாற்றினர்.

## பொலிஸார் தேடும் கார்

கொழும்பு, செவ்

வெள்ளைநிறமுடைய மெஸ்டா கார் ஒன்றைக் கண்டீர்களா? 5 ஸ்ரீ இலக்கத் தொடருடைய இந்தக்கார் மர்மமான முறையில் காணமல் போய் விட்டதாக வென்னப்புவ பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்ட சிலர் இந்த மெஸ்டா காரில் தப்பிஓடிவிட்டனர் என்று தெரியவருகிறது. இந்தக்காரைக் கண்டவர்கள் உடனடியாக அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

# கம்யூ. கட்சி வடக்கில் போட்டியிடுமா?

## முன்னைய முடிவை மாற்றுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ். மாவட்டக்கிளை எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்திலுள்ள தொகுதிகளில் கட்சியின்சார்பில் வேட்பாளர்களை நிறுத்துவதில்லையென்று முன்னர் தீர்மானித்த போதிலும் இப்போது அந்த முடிவை மாற்றவேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வேட்பாளர்பட்டியல் உத்தியோக ரீதியாக வெளியிடப்பட்ட பின்பே தேர்தலில் கம்யூனிஸ்ட்கட்சியும் வேட்பாளர்களை நிறுத்த வேண்டுமென்று மாவட்டக் கமிட்டியை பலர் வற்புறுத்தியுள்ளனர்.

கூட்டணிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையில் எதிர்பார்க்கப்பட்ட இணைப்பு இன்னமும் ஏற்படாததுமட்டுமல்லாமல் இணைப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை இல்லாததாலும் யாழ். மாவட்டத்தில் குறைந்தது ஏழுதொகுதிகளிலாவது கட்சி தனதுவேட்பாளர்களை நிறுத்த வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, உடுப்பிட்டி, காங்கேசன் துறை, வவுனியா, முல்லைத்தீவு, மானிப்பாய், பருத்தித்துறை ஆகிய தொகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடவேண்டுமென்று விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைபற்றி ஆராயும் பொருட்டு இன்றோ நாளையோ மாவட்டக்கமிட்டி கூடவிருப்பதாகவும் கட்சிவட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

என்றாலும் கமிட்டியில் சிலர் தேர்தலில் போட்டியிடும் யோசனையை ஆதரிக்கவில்லையென்றும் குறிப்பாக திரு. வி. பொன்னம்பலம் தேர்தலில் நிற்க விரும்பவில்லையென்றும் அறியப்படுகிறது.

## தமிழ்த்தொகுதி--

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மையிலான ஈழத்தமிழர் தொண்டர்சபை சார்பில் 21 தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தவிருக்கிறது.

ஐக்கிய தேசியக்கட்சி வடக்கில், வவுனியா, மன்னர் ஆகிய தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தவிருக்கிறது. வடக்கில் மற்றும் தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி இம்மாதம் 25-ம் தேதி முடிவு செய்யவிருக்கிறது.

தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களான திரு. குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்திலும், திரு.எம்.கே சுப்பிரமணியம் வட்டுக் கோட்டையிலும் போட்டியிடவிருக்கிறர்கள்.

யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேட்சையாக யாழ்ப்பாண எம். பி. திரு. சி.எக்ஸ் மார்ட்டினும், யாழ். அரசாங்க கூட்டுத்தாபன மொன்றின் முகாமையாளரான திரு. சி. பாலசிங்கமும் போட்டியிடவிருக்கிறர்கள். உடுப்பிட்டித் தொகுதியில் சுயேச்சையாக திரு. எம். மோதிலால் நேரு, ஆர்.ஆர். தர்மரத்தினம். திரு. மகாதேவா ஆகியோர் போட்டியிடவிருக்கிறர்கள். பருத்தித் துறையில் சுயச்சையாக திரு. என். நடராசா, திரு. எஸ். வீரவாகு ஆகியோர் போட்டியிட விருக்கிறர்கள்.

முல்லைத்தீவுத் தொகுதியில் கல்லோயா அபிவிருத்திசபை முன்னள் தலைவரும், பொறியியலாளருமான திரு. வே. சந்திரசேனன், நீதிஅமைச்சு உத்தியோகத்தரான திரு. சச்சிதானந்தன், திரு. எஸ். சந்திரசேகரி ஆகியோர் சுயேச்சையாகப் போட்டியிடவிருக்கிறர்கள். வட்டுக்கோட்டைத் தொகுதியில் திரு. இராஜசுந்தரம் சுயேச்சையாகப் போட்டியிடவிருக்கிறர். (சு-அ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

தந்தை செல்வாவின் அஞ்சலிக் கூட்டங்கள் நாளை வட்டுக்கோட்டையிலும், மாதகலிலும் இட பெறும். வட்டுக் கோட்டையில் சங்கரத்தையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களும் தமிழ் இளைஞர் பேரவை மகளிர்பேரவை உறுப்பினர்களும் இரங்கலுரை நிகழ்த்துவார்கள். (கி-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanaadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.